விலை சதம் 5

கொழும்பு பதிப்பு

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்,
"சுதந்திரன்",
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சாவலக்க வருஷம் ஐப்பசி 14ம் வெள்ளிக்கிழமை | Colombo, October, 31 1947 — பறிஜிரி 1866 துளஹஜ் பிறை 6 | விலை 150

யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக் கழகம்

ஸர். பொன். இராமனாதன் கனவை நனவாக்க தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ ஜீ. முயற்சி

தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் வளர்ப்பதுவும் தமிழரது தனிப்பெரும் கலை, கலாசாரம், தத்துவம், பண்பு, நாகரீகம் இவைகளைப் பரப்புவதுமே இலட்சியம்

வகுப்புவாதிகளின் சூழ்ச்சியால் உண்டான இலங்கை சர்வகலாசாலை என்னும் பௌத்த சிங்கள சர்வகலாசாலை தமிழருக்குப் பயனளிக்காது

('சுதந்திரன்' விசேஷ நிருபர்)

கொழும்பு, அக். 31-

ஸர். பொன். இராமனாதன் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டுமென்று கனவு கண்டார். அக்கனவை கூடிய சீக்கிரத்தில் நனவாக்க வேண்டுமென்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் கங்கணங்கட்டியுள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நோக்கங்களில் ஒன்று "தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் வளர்ப்பதும், தமிழ் மக்களின் கலை, கலாசாரம் இலட்சியம் ஆகியவற்றைப் பரப்புவதுமாகும்". தமிழுக்கென ஒரு பல்கலைக் கழகமில்லாதிருந்தால் இந்நோக்கத்தைப் பூர்த்தியாக்க முடியாதென்கிறார் திரு. ஜீ ஜீ பொன்னம்பலம்.

இன்றுள்ள இலங்கைச் சர்வகலாசாலை திரு டி எஸ் சேனநாயக்கா போன்ற சிங்கள அரசியல் வகுப்புவாதிகளைக் கொண்ட அரசாங்கத்தால் நடத்தப்படுவதால் தமிழ் மக்கள் அச் சர்வகலாசாலையில் அதிக நன்மையைப் பெற்றுக் கொள்ள முடியாதென்பது பொதுவாகத் தமிழ் மக்களின் அபிப்பிராயமாகும்.

பேராதனையில் நிறுவவிருக்கும் இலங்கைச் சர்வகலாசாலை தமிழருக்கு ஒவ்வாததென்பதை "வேண்டுமென்றே போக்கிரித்தனமாக இரகசியத்தில் ஸர். டி. பி. ஜயத்திலக்காவாலும், திரு. சேனநாயக்காவாலும் தமிழ் மக்களை அடக்குவதற்கு இரகசியத்தில் தயாரிக்கப்பட்ட சூழ்ச்சி" என்று ஸர் இராமனாதன் குறிப்பிட்டுள்ளார்.

ஸர் ஜயத்திலக்காவின் மரணத்தின் பின்பு, விஜயவர்த்தனா சேனநாயக்கா குடுவினர் மிகுந்த அவசரத்துடனும், என்றுமில்லாத உணர்ச்சியும் உத்வேகமும் கொண்டு பேராதனையில் ஒரு சர்வகலாசாலையை நிறுவுவதற்கு முயற்சித்து இப்பொழுது வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

இவர்கள் அத்துடன் நின்றுவிடவில்லை. தமிழ் மக்களை மீது சிங்கள மக்களின் ஆத்திரத்தைத் தூண்டுவிக்கும் பத்திரிகை முதலாளியாகிய திரு. டி ஆர் விஜயவர்த்தனா, பேராதனைச் சர்வகலாசாலை நிலைபெறுதில், புத்த கோவில் ஒன்றைக் கட்டுவதற்கும், புத்த மாணவர்களுக்கும் புத்த பிக்குகளுக்கும் விடுதிக் கழகங்களை கட்டுவிப்பதற்கும் ஆறு லட்சம் ரூபாய்களை நன்கொடையளித்துள்ளார். இந்நன்கொடையை சேனநாயக்கா அரசாங்கம் ஏற்றுக் கொண்ட அவதி, இலங்கைச் சர்வகலாசாலையை ஒரு பௌத்த சிங்களச் சர்வகலாசாலையாக்க முனைந்திருக்கின்றார் திரு. சேனநாயக்கா என்பதை நன்கு வெளிப்படுத்துகின்றது.

பௌத்த சிங்களச் சர்வகலாசாலையைத் தமிழ் மக்கள் எள்ளளவேனும் எதிர்க்கவில்லை. ஆயினும் தமிழுக்கும் தமிழ்க் கலைக்கும் கலாசாரத்திற்கும், தத்துவ சாஸ்திரங்களுக்கும் சரி சமமான அந்தஸ்து கொடுபடாதிருப்பதைத்தான் தமிழ்மக்கள் வெறுக்கிறார்கள்.

பேராதனைச் சர்வகலாசாலையில் ஒரு மாணவன் கல்வி கற்பதற்கு மாசம் ரூ 150 அல்லது 200 பிடிக்கும் இப்பணத்தைச் சாதாரண தமிழ் மக்களால் கொடுத்துத் தம் பிள்ளைகளுக்கு சிங்கள பௌத்த கலாசாரத்தைப் புகுத்துவிக்கக் கொள்ள முடியாது. இன்னும் பணமுள்ள தமிழர் கொஞ்சம் கூடிய செலவுடன் தம் பிள்ளைகளை "ஓக்ஸ்போர்ட்" அல்லது "கேம்பரிட்ஜ்" சர்வகலாசாலைகளில் மாதம் ரூ 300 கொடுத்து கல்வி பெற்றுக் கொடுக்கலாம் என்ற அபிப்பிராயமும் நிலவுகிறது.

இக்காரணங்களை முன்னிட்டே திரு பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் தம் கலைகளை வளர்க்கக்கூடிய ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ வெளிப்போந்துள்ளார்.

தென் ஆப்பிரிக்க யூனியன் இலங்கையிலும் பார்க்கமிகவும் சிறிதானதாகும். ஆயின் அங்கு எட்டு சர்வகலாசாலைகள் உண்டு. இலங்கையில் இரண்டு ஆகாது? தமிழ் மக்கள் குறைந்தசெலவில் நிறைந்த சர்வகலாசாலைக் கல்வியைப்பெறுவதற்கு யாழ்ப்பாணத்தில் தமிழர் பல்கலைக் கழகமொன்று நிறுவுவது நன்றென்றே இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள தமிழ்ப்பெரியார்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

திரு பொன்னம்பலம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழர்கலை, இலக்கியம், கலாசாரம் ஆகியவற்றிற்கும் தமிழர் உற்பத்தி, தமிழர் சரித்திரம், இலங்கை, இந்தியா-இருநாடுகளிலுமுள்ள இலக்கியங்கள் ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்வதற்கும் வசதி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்போவதாகவும் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு இப்புனித பணியைச் செய்து வைப்பார்களா?

யூ. என். பி. கட்சியின் ஐந்தாம் படைத் தமிழர்கள்

சிங்களக் கொடியை தேசியக் கொடியாக்க ஆதரவு தேடும் சூழ்ச்சி

முத்திரைக் கோலுக்கும் சிங்கத் தலையாம்!

இலங்கை-பிரிட்டன் ஒப்பந்தம்பற்றி பாராளுமன்ற சபையில் சதியாலோசனையா?

(நமது அரசியல் நிருபர்)

கொழும்பு, அக். 31

சிங்கக் கொடியை, தேசியக் கொடியாக்குவதற்காக இலங்கையின் பல பாகங்களிலும் பொது மக்களிடம் சூழ்ச்சியாகச் சிலதான் தோன்றித் தலைவர்கள் சம்மதக் கைச்சாத்து வாங்குவதாக அறியப்படுகிறது.

கைச்சாத்தகள் வாங்கித் திரிபவர்களில் சிலர் யூ. என். பி. கட்சியிலுள்ள ஐந்தாம் படைத் தமிழர்கள் என்றும் கூறப்படுகிறது.

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையில் உபயோகிப்பதற்கான ஒரு முத்திரைக் கோல் சிங்கத்தின் தலைபோன்ற வேலைப்பாட்டுடன், இலங்கையில் செய்விக்கப்படவிருக்கின்றதென தெரியவருகிறது. அச்சிங்கத்தின் கண்களிலும், உச்சியிலும் இரத்தினக்கள் அழுத்திவைக்கப்படுமாம்.

இச்சிங்க முத்திரைக் கோலை செய்வதற்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரை செல்லுமாகையால் பிரிட்டிஷ் பொது மக்கள் சபையிலிருந்து பரிசாக வரும் முத்திரைக் கோலையே பெப்ரவரி வரைக்கும் உபயோகிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதாம்.

பிரிட்டிஷ் முத்திரைக் கோல் நவம்பர் மாதம் 25-ம் தேதியன்று பாராளுமன்றத் திறப்பு விழாவின்போது, பிரிட்டிஷ் பொது மக்கள் சபையின் உதவி லிசிதர் திரு. ஈ. ஏ. வெ லாள அவர்களால் இங்கு அளிக்கப்படும் என்றும் பேசப்படுகிறது.

முத்திரைக் கோல் பிரதிநிதிகள் சபைத் தலைவர் (ஸ்பீக்கர்) சபையினுள் புகும் பொழுதும், வெளியேறும் பொழுதும் அவர் முன்பாக சார்ஜன்ட் - அட் - அர்மஸால் கொண்டுபோகப்படும். தலைவர் உட்கார்ந்திருக்கும் பொழுது சபையில் அவர் முன்பாக அது ஒரு மேசையின் மீது வைக்கப்படிருக்கும்.

நேற்று நடைபெற்ற சேனநாயக்கா மந்திரி சபைக் கூட்டத்தில் நான்கு பணிதியாலங்கள் வரையில், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் சில இலங்கைப் பிரதிநிதிகளுக்குமிடையில் தற்காலிகமாகத் தீர்மானிக்கப்பட்ட ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக ஆலோசனைகள் நடைபெற்றதாக அறியப்படுகிறது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்படும் பிரதிநிதிகளுக்குமிடையில்தான் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமென்றும் அரசன் முடிவைப் பொறுத்தே இலங்கைக்கு சாம்ராஜ்ய நாடுகளுக்குட்பட்ட பொறுப்பாட்சி வழங்கப்படும் என்றும் முன் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி அறிவித்திருந்தார். ஆயினும் இப்பொழுது பாராளுமன்றம் கூடுவதன் முன்பே ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளவாம்!

இக்கூட்டத்தில் திருவாளர்கள் ஜே. ஆர். ஜயவர்த்தனா, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆகிய இரு மந்திரிகளுமே நன்கு பேசினார்களாம். பற்றும் மந்திரிகள் யெனஞ்சாகிதிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

ஒரு மந்திரியார் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளில் சில சிக்கல்கள் இருப்பதாகவும், அது சுமுகமாகத் தீர்க்கப்படாவிட்டால் மந்திரி சபையில் நெருக்கடி ஏற்படுமென்றும் கூறியிருக்கின்றார்.

கூட்டம் முடிந்தபின் திரு. டி. எஸ். சேனநாயக்கா, உள நாட்டு மந்திரி ஸர். ஒலிவர் குணதிலக்காவுடனும் சர்வகலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் ஐவர் ஜென்னிங்ஸுடனும் சந்தித்து இது சம்பந்தமாகச் சமபாஷித்துள்ளாராம்.

இந்தியா-இலங்கைப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முன் திரு. சேனநாயக்கா இங்கிலாந்து சென்று பிரிட்டிஷ்—இலங்கை ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளுவார் என்றும் கூறப்படுகிறது.

மந்திரி சபையினர் பத்திரிகைகளுக்கு தங்கள் கொள்கைகள் சம்பந்தமாக அறிக்கைகள் விடுப்பது சரியல்ல என்று திரு. டி. எஸ். சேனநாயக்கா மற்றும் மந்திரிகளை எச்சரித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சேனட் சபைத் தலைவர் பதவிக்கு ஸர். ஜெருட் விஜயகோன், ஸர். மொகமட் மாக்கான் மரைக்கார், திரு. சிவகுமாரசுவாமி, திரு. பெரிசுந்தரம் ஆகிய நால்வரும் போட்டியிடுவார்களெனத் தெரியவருகிறது.

இந்தியர்களுக்கு ஒரு விசேஷமான பதவிகளும் மந்திரி சபையினால் கொடுக்கப்படாத படியால் சேனட் சபைத் தலைவர் பதவியை திரு பெரிசுந்தரமவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று ஐக்கிய தேசிய அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

தலைவரையும், உப தலைவரையும் தெரிவு செய்வதற்காக சேனட் சபை நவம்பர் மாதம் 11-ம் தேதி கூடும்.



"தமிழன் மொழி கலை, கலாச்சாரம் பாதுகாத்தல் வேண்டும்"
-ஜீ. ஜீ. பொன்னம்பலம்

விமான விபத்தில் கவானர் மரணம்

ஓரகான், அக் 29

வேட்டையாடுவதற்காக அமெரிக்காவிலுள்ள ஓரகான் மாகாண கவர்னர் எனெல்மான் மந்திரி ராபர்ட் பாரலும் மாகாண செனட் சபைத் தலைவர் காண்டமும் மற்றும் அரசாங்கத்தின் உயர்தர அதிகாரிகளும் பறந்து சென்ற விமானம் பர்னஸ் பள்ளத்தாக்கில் நொறுங்கி விழுந்து கிடந்தது. விமானத்தில் பயணம் செய்த அனைவரும் இறந்து கிடந்தார்கள்.

காஷ்மீர் நிலைமை

போட்டி சர்க்கார் அறிக்கை

சராச்சி, அக் 29

காஷ்மீர் இந்திய யூனியனில் சேர்ந்திருப்பதைப் பாக்கிஸ்தான் ஏற்றுக்கொள்ளாதென்றும், இது உலக சமாதானத்திற்கு ஆபத்தையுண்டுபண்ணியிருக்கிறதென்றும் இது சர்வதேச விவகாரத்துக்கு வரும் என்றும் பாக்கிஸ்தான் பிரதிநிதி தெரிவித்தார்.

காஷ்மீர் மீது படையெடுத்துள்ள மலை ஜாதியினருக்கு ஏராளமான ஆயுதங்களும் ராணுவ உதவிகளும் வந்துகொண்டிருப்பதாக இந்திய ராணுவ விமானத்தில் கண்காணிப்பு செய்து வந்த இந்திய ராணுவ வீரர்கள் தெரிவிக்கின்றனர். பலமான எதிரிகளை எதிர்த்து இந்தியப் படைகள் போராடுகின்றன.

காஷ்மீர் சுதந்திரப் புரட்சி ராணுவப் படையினர் ஸ்ரீநகருக்கு 10 மைல் தூரத்தில் வந்துவிட்டதாக கராச்சிக்குக் கிடைத்த செய்தி தெரிவிக்கிறது காஷ்மீர் போட்டி சர்க்காருக்குத் தலைவரான சர்தார் இப்ராஹிம் காஷ்மீரத்தின் பெரும் பகுதி போட்டி சர்க்கார் வசமிருப்பதாக அறிவித்திருக்கிறார். (அ பிரஸ)

வெடி மருந்துக் கிடங்கு வெடித்தது

ஹாம்பர்க், அக். 29

பனமுப்பு ஜர்மன் வெடி மருந்துத் தொழிற சாலை ஒன்றில் இருக்கும் இரு கிடங்குகள் வெடித்ததன் காரணமாக 20 பேர் காயமடைந்து போய் விட்டதாகத் தெரிகிறது. (ரா)

சர்வ கலாசாலை-சட்டக் கல்லூரி தர்க்கப் போட்டி

நாளை நடைபெறும்

கொழும்பு, அக் 29

சட்டக் கல்லூரிக்கும் சர்வகலாசாலைக்கும் நடக்கும் வருடாந்த விவாதப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 4-15 மணிக்கு "கிங் ஜியார்ஜ் பண்டபத்தில் நடைபெறும்.

"உலகப் புரட்சி தற்கால மனிதனின் பிரச்னைகளைத் தீர்க்கும் வழி" என்று சட்டக் கல்லூரிக் கோஷ்டி வாதாடும். சட்டக் கல்லூரியின் சார்பில் தர்க்கமிடுபவர்கள் பெயர் பின்வருமாறு:- எம். சிவ சிதம்பரம் (தலைவர்) வேணுபொக் தேஜா, எஸ். சண்முக நாதன்.

தீயிட்டவருக்குச் சிறைத் தண்டனை

கொழும்பு, அக். 29

தமது மாமனார் வீட்டுக்கு நெருப்பு வைத்த கந்தன் பொன்னன் என்ற செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளி மீது மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட்டால் 3 மாத கடுமியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. குறித்த சம்பவத்தின்போது எதிரி மதுவுண்டிருந்தான் என்று சாட்சிகளால் கூறப்பட்டது. (ந-சி)

மலேயா சர்க்கார் கெடுபிடி

151 பேர்களை வெளியேற்றினர்

லண்டன், அக் 30

இன்று காமன்ஸ் சபையில் மலேயாவைப்பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு குடியேற்ற நாட்டு மந்திரியின் காரியதரிசி பின் வருமாறு பதிலளித்தார்:-

மலேயாவில் குற்றங்கள் அதிகரித்து வருவதால் தேசப் பிரஷ்டச் சட்டப்படி மலேயா சர்க்கார் விரும்பத்தகாதவர்களை நாட்டை விட்டு வெளியேற்றி வருகின்றனர். இவ்விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் தலையிட முடியாது.

மலேயா யூனியனில் ஜனவரியிலிருந்து செப்டம்பர் மாதம் வரை 49 பேர்கள் வெளியேற்றப்பட்டனர். சிங்கப்பூரில் ஜனவரியிலிருந்து நாளது வரை 102 பேர்கள் வெளியேற்றப்பட்டனர். (ராய்ட்டர்)

சிறையில் விதவை பிரசவித்தாள்!

டாச்சு, அக். 30

சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் யுத்தக் குற்றவாளியான இல்ஸே கோச் என்ற ஜெர்மன் நாஜி விதவை இன்று லண்ட்ஸ்பெர்க் ஆஸ்பத்திரியில் ஒர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அக் குழந்தையின் தகப்பன் யாரைச் சொல்ல அவள் மறுத்து விட்டாள். அவள் புருஷனான தளபதி வால்டர் கொக்கை நாஜிகள் 1944 ம்வருடம்சிரைச்சேதம் செய்தனர். (ராய்ட்டர்)

உயிருடன் கோலுரிக்கும் கொடுமை

ஒழிக்க சட்டம் வேண்டும்

வாஷிங்டன், அக். 30

பிரஜா உரிமை சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்திய கமிட்டியார் இன்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனிடம் அறிக்கை சமர்ப்பித்தனர். அமெரிக்காவில் ஜாதி, நிற, மதபேதமின்றி எல்லோருக்கும் பிரஜா உரிமை வழங்க வேண்டுமென்றும் நீக்ரோக்களுக்கு விதிக்கப்படும் ஆள் வாயை நீக்க வேண்டுமென்றும் நீக்ரோக்களை வெள்ளையர் உயிருடன் தோலுரிக்கும் கொடுமையை ஒழிக்க சட்டம் வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [ராய்ட்டர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
104, பட்டாசுத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வதிக்க ஒரு ரூப்பாவி மீ 14உ
வெள்ளிக்கிழமை

உண்மைச்சுதந்திரம்

இலங்கைக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தின் நிலைமையைப் பற்றி நாம் நேற்று குறிப்பிட்டோம். சுதந்திரம் என்பது ஒரு நாட்டிலுள்ளவர்களுள் எல்லோருக்கும்பொதுவாகியதல்லதாயிருந்தால் அதனைச் சுதந்திரம் என எப்படிக் கொள்ள முடியும்?

இலங்கைவாழ் எல்லா மக்களும் ஒற்றுமைப்பட்டு இருக்க வேண்டும். ஒருவரை யொருவர் அடக்கியாளும் நிலைமை இருக்கலாகாது என்பதே தமிழ்க்காங்கிரஸின் கொள்கை. எல்லோரும் சமத்துவமாய்சுதந்திரம் பெற வேண்டும் சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும் என்பதையே சாதிப் பிரிவினையென்று பெரும் பான்மையோர் ஓலமிடுகிறார்கள். பெரும் பான்மையோர் செய்யும் சுய ஜாதிப் பிரசாரங்கள் எல்லாம் சுதந்திரப் பிரசாரமாக மாறுகிறது. இதுதான் இப்பொழுதுள்ள இலங்கையின் அரசியல் நிலைமை.

சிங்களப் பத்திரிகைகளில் நடைபெறும் பிரசாரங்களைக் கவனிப்பவர்களுக்கு பல உண்மைகள் விளங்கும். சிறு துரும்பை தூணாக்கிக் கொண்டு தலைவிரித்தாடுகிறார்கள் சமதர்மம், சமத்துவம் என்று பேசிக் கொண்டு திரியும் கூட்டத்தார்களும் சமயம்வந்தால் இதர சிங்களவர்களுடன்தான் சேர்வார்கள் என்பது வெளியாகிறது. சிங்களவன், தமிழன் என்ற வித்தியாசம் இந்நாட்டு மக்களுள் பல நூற்றாண்டுகளாக ஊறி ரத்தத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இதனை ஒரே நாளில் ரத்து செய்துவிட முடியாது. ஆகவே, இந்த விதியாசத்தில் ஏற்படக்கூடிய சந்தேகங்களையும் சவலைகளையும் ஒற்றுமை வேண்டுவதாகச் சொல்லிக்கொண்டு திரியும் யூ. என். பி. காரர்கள் நீக்க முயல வேண்டும். செனட் சபைத் தேர்தலையும் நியமனங்களையும் கவனிக்கையில், இவர்களது மனோபாவம் எப்படியுள்ளது எனவளங்கும் ஒரு தலைவரின் மாமனார், மற்றொரு தலைவரின் பெண்சாதி, மற்றொருவரின் சகோதரர் என்றும், மற்றும் வேறுவித காரணங்களால் பிணைக்கப்பட்ட உறவின்முறையைக் கொண்டும் நடைபெற்றிருக்கிறது. பப்ளிக் சர்விஸ் கமிஷன் நியமனத்திலும் இந்த உறவின்முறை ஆசைவிடவில்லை என்றெண்ண வேண்டியிருக்கிறது. பிரதமமந்திரிக்கு சுலபமான வழியிருக்கிறது. நான் என்ன செய்ய, கவர்னர் நியமனம் எனலாம்! யார் யார் பேரில் பழிபோட்ட போதிலும் உலகத்தார் ஏமாறமாட்டார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும். இவ்விதமான காரியங்களால் சிறுபான்மையோருடைய மனச் சந்தேகங்களை நீக்கிக்கொள்ள முடியுமா?

சிங்கக் கொடியை எடுத்துக் கொள்ளுவோம். சிங்கக் கொடியை தேசியக் கொடியாக்கப்படாது என்று சொன்னதும் திருசேனநாயக்கா அப்படித்தான் என்று சொல்லிவிட்டார். ஆனால் அவருடைய பந்தங்கள் அலறிபெடுத்துக்கொண்டு தலைவிரித்தாடுகிறார்கள் உண்மையென்ன. இந்த சிங்கக் கொடி விஷயத்தில் சேனநாயக்காவின் பங்கு என்ன? தனக்கொன்றுமில்லையென்று கை விரிப்பாரேயானால், அரசாங்கக் கணக்கில் 70,000 கொடிவரையில் தருவித்ததுயார் உத்தரவின் பேரில்? இக்கொடிக்கு உத்தரவு கொடுத்தது எப்பொழுது? 70,000 கொடிகள் தயார் செய்து இந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட சிலமாதங்களாவது ஆகும்; சற்று யோசிக்கப்போனால் சேனநாயக்கா கூட்டத்தாகள் எதேச்சாதிகாரம் செய்து கொண்டிருக்கையில் இதற்கு ஆர்டர் கொடுத்திருக்கவேண்டு; ஒவ்வொரு விட்டால் இச்சபடத்தில் இக்கொடிகள் வந்திருக்க முடியாது இந்நிலையில் திரு சேனநாயக்கா தான் சிங்கக் கொடியை நாட்டப் பிரியப்படவில்லை; பார்லிமெண்ட் சபையைக் கேட்டுச் செய்யவேண்டுமென்று சொல்லுவதை நாம் நம்ப முடியவில்லை

இதுபோல் இவர்கள் செய்து வரும் காரியங்கள் ஒவ்வொரு தமிழன் மனத்தையும் கலக்கும் என்பதற்கையமில்லை இந்நாட்டில் தமிழன் ஒரு காலத்தில் அரசு புரிந்தான். பிறகு பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சமத்துவ நிலையில் இருந்தான். பிரிட்டிஷ் ஆட்சியை விட்டு சுயாட்சி வேண்டுமென்று சிங்களவர்களுக்கு யோசனை சொல்லிக்கொடுத்து, சுயாட்சிக்கு அடிகோலியது தமிழன். இவ்விதம் தமிழன் செய்த நன்றியை மறந்து, தமிழனை அடக்கியாளும் நிலைக்குச் சிங்கள சகோதரர்கள் வந்துவிட்டார்கள் தங்கள் ஆட்சிக்கு உலை வைத்த தமிழனுக்கு நல்ல புத்தி படிப்பிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபதியக்காரர்கள் சிங்களவர்களுடன் கலந்துகொண்டு அவர்களிடம் தமிழர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டார்களென்று சொன்னால் அது தவறாகா

இருக்கும் நிலைமையைக் கூட்டிக்குறைத்தோ அலசுகிறித்தோ கூறுவது எங்கள் நோக்கமல்ல உள்ளதை உள்ளபடி விளக்கி தமிழ் மக்கள் கண்விழித்து தங்களது வாங்கால வாழ்வில் சுபீட்சமும், சுதந்திரமும் ஏற்படும்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதே எங்கள் அவா? நாங்கள் சொல்லுகிறோமென்பதற்காக எந்த முடிவுக்கும் வரவேண்டாம் அவரவர்களும் தீர யோசனை செய்து சரியான முடிவுக்கு வரவேண்டும்; அதவும் இப்பொழுதே வரவேண்டும் நமக்கென்ன, நாளையாகட்டும் என்பதெல்லாம் நமனை எதிர்பார்க்கும் பேச்சுகள் ஆகவே, ஒவ்வொரு தமிழனும் தூக்கம் விட்டு எழுந்திருப்பானாக!

ஐந்து வருஷம் போலிஸாரை ஏமாற்றியவன்

மத்துகமை கோர்ட்டில் ஆஜர்

களுத்துறை, அக். 30

வெலிப்பன்னைப் போலிஸைச் சேர்ந்த நலரத்னவைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட உக்குவா என்பவன் மத்துகமைப் போலிஸ் லொக்-கப்பில் இருந்து நாலு வருடங்களுக்கு முன் தப்பியோடிவிட்டான் ஏறக்குறைய 5 வருஷ காலம் போலிஸாரை ஏமாற்றி வந்த இவன் மினிபே யில வைத்து சமீபத்தில் கைது செய்யப்பட்டான்.

இரண்டாவது தடவையும் பாய்ந்தோடி விடாமல் இருக்க விசேஷ ஜெயில் வானில் அவனை கொண்டுவரப்பட்டு மத்துகமைக் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டான்.

விசாரணையின் பின்னர் கொழும்பு ரிமாண்ட் ஜெயிலுக்கு அவன் அனுப்பிவைக்கப்பட்டான் விசாரணை இன்னும் பூர்த்தியடையவில்லை.

செக்மோசடி வழக்கு

எதிரி ஒரு பெண்

கொழும்பு, அக் 31

கொழும்பு உதவி மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் நேற்று முன்தினம் புளோரன்ஸ் ஏகநாயக்கா என்னும் மாது ஆஜர் செய்யப்பட்டார். நவம்பர் 12-ம் தேதி வரை அவர் வளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் மீது 2000 ரூபாய்க்கு போலிஸ் செக் கொடுத்து, டி. ஸி அபயசூரியா என்பவரை ஏமாற்றியதாகச் சொல்லப்பட்டது. அவர் பாணந்துறையில் வைத்து சென்ற செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார். அவர் சார்பில் ஆஜரான அன்ட்ரூடி சில்வா எதிரி சார்பில் தான சொல்ல வேண்டியது மிகச் சொற்பமே எனக் குறிப்பிட்டார்.

ஹைதராபாத் சமஸ்தானத்தின் சதி

ராய்ட்டர் செய்திகள்

துருக்கி குடியரசு

அங்காரா நகரில் துருக்கி குடியரசின் 24 வது வருடக்கொண்டாட்டம் 29-ம் தேதி யன்று ராணுவ அணிவகுப்புகளுடன் அதுவமரிசையாக நடைபெற்றது.

எகிப்தில் ரர்ணுவச் சட்டம்

எகிப்தில் இனனும் சிலதினங்களுக்குள் காலரா நோயைக் கட்டுபடுத்த முடியாவிடில் அங்கு ராணுவ ஆட்சி நிறுவப்படும். காலரா பிரான்ஸிலும் ஆஸ்திரேலியாவிலும் பரவாதபடி நடவடிக்கை எடுக்கதுக் கொள்ளப படுகிறது நவம்பர் மாதம் கெய்ரோ நகரில் ஸ்டெர்லிங் நிதி சம்பந்தமாக பிரிட்டன்-எகிப்து சமரசப் பேச்சு நடைபெறும்.

கிரீஸ கொரில்லா போர்

கிரீஸில் ஒரு ரயிலை கிரேக்க கமியூனிஸ்டுகளான கொரில்லாக்கள் தாக்கியதால் இரு ரயிலவே ஊழியர்களும் 5 கமியூனிஸ்டுகளும் மாண்டனர்.

பாலஸ்தீன புரட்சி செயல்

ஜெருசலேம் போலிஸ் ஸ்டேஷனை வெடிகுண்டால் தாக்க முயன்ற யூத இளைஞனுக்கு 15 வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. யூதப் புரட்சிக் கூட்டம் ஜப்பா போலிஸ் தலைமைகாரியாலயத்தை தகர்க்க சதிசெய்வதை அறிந்து போலிசார் உஷாராக இருந்தார்கள்.

கனம் ஆகாகான்

கனப ஆகாகான் சத்ரசிகிச்சைக்குப் பின் குணமடைந்து வருகிறார். அவர் பாரிஸை இனனும் இரண்டு மூன்று வாரங்கள் தங்கியிருப்பார்.

போர்ச்சுகல் தலைவர்

போர்ச்சுகல் குடியரசுத் தலைவர் கார்மோனா நேற்று நேசநாடுகளுக்கு ஆதரவு முற்றிலுமாகிறார். 28-ம் தேதி நடைபெற்ற அவர் மனைவியின் பிறந்த தின விருந்தில் கலந்து கொண்டார்

பிரிட்டனில் பெட்ரோல் பஞ்சம்

பிரிட்டனில் பெட்ரோல் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் கட்டுபாடின்படி பெட்ரோல் கிடைக்காது. உலக மோடார் பந்தயப் போட்டி நிபுணரான ஜான் கோப் இந்த வருட பந்தயத்தில் கலந்து கொள்ளவில்லை

பிரிட்டிஷ் மாலுமிகள் வேலைநிறுத்தம்

லிவர்பூல நகரில் பிரிட்டிஷ் மாலுமிகள் வேலைநிறுத்தம் செய்வதால் தூரகிழக்கு நாடுகளுக்குச் செல்லும் 'எம்பரஸ் ஆப்ஸ காட்லாந்து' என்ற கப்பல் 2400 ராணுவ வீரர்களையும் மற்ற பிரயாணிகளையும் ஏற்றிக் கொண்டு பயணமாக முடியாது போயிற்று.

உலகம் சுற்றிய அமெரிக்க விமானிகள்

சாவதானமாக உலகைச் சுற்றிய இரு அமெரிக்க விமானிகள் அமெரிக்கா போய்ச் சேர்ந்தார்கள்.

தங்கச் சுரங்கத்தில் வெடி விபத்து

தென்னாப்பிரிக்கா விலராண்ட்பாண்டின் எஸ்டேட் தங்கச் சுரங்கத்தில் வெடி விபத்து ஏற்பட்டதில் ஒரு ஐரோப்பியரும் 11 ஆப்பிரிக்கர்களும் மாண்டனர்.

அமெரிக்க விமானம் காணவில்லை

ஓரிகான் மாகாண கவர்னர், மந்திரி பாரல, மாகாண செனட் சபைத் தலைவர் முதலிய அரசாங்க அதிகாரிகளை ஏற்றிகொண்டு வேட்டையாடுவதற்காக புறப்பட்டுச் சென்ற விமானத்தைக் காணவில்லை.

அயர்லாந்தில் உபதேர்தல்

அயர்லாந்தில்மூன்றுதொகுதிகளில் உபதேர்தல்கள் நடைபெற்றன. வெள்ளிகிழமை காலை முடிவு தெரியும். தனது கட்சி வெற்றிபெறுமென்று டிவாலரா நம்புகிறார் சாக்காரக்சி தோல்வியுற்றால் பொதுத் தேர்தல் நடைபெறக கூடும்.

ஒரு கோடி ரூபாய்க்கு பிரிட்டனிலிருந்து ஆயுதங்கள்

கராச்சிக்கு முஸ்லிம் கட்சி தூது; டில்லி சென்ற தூதுக் கோஷ்டி ராஜினாமா!

காஷ்மீர் தலைவர் அப்துல்லாவுக்கு அஸாம் கவர்னர் ஹைதாரி தந்தி

லண்டன், அக். 28—

நிஜாம் சர்க்கார் பிரிட்டிஷ் வியாபாரிகளிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் வாங்குகிறது.

நிஜாம் சென்ற 10 தினங்களுக்கு முன் தமது சேனாதிபதி ஜெனரல் எட்ரூஸை லண்டனுக்கு அனுப்பினார். இவரும் பிரிட்டனிலுள்ள நிஜாம் ஏஜண்டு ஜெனரலுமாகச் சேர்ந்து பிரிட்டிஷ் ஆயுத உற்பத்தியாளரை சந்திப்பதில் முனைந்தனர். பிரிட்டிஷ் ஆயுத உற்பத்தியாளரைச் அழைத்து அநேக விருந்துகளும் நடத்தப்பட்டன.

நிஜாம் சர்க்கார் பணத்தை தெரிதாகக் கருதவில்லை என்றும் இரண்டு வாரத்திற்குள ஆயுதங்கள் சப்ளையே முக்கியமென்றும் ஜெனரல் எட்ரூஸ் அவர்களிடம்கூறியதாகத் தெரிகிறது.

ஹைதராபாத்துக்கு முதல் ஆயுத சப்ளை பேரனதை பொட்டி சென்ற வியாழனன்று ஒரு விருந்து நடத்தபட்டது இந்த ஆயுதங்கள் ஒரு விசேஷ விமானத்தில் அனுப்பப்பட்டன.

ஜெனரல் எட்ரூஸ் சுமார் ரூ 1 கோடி பெறுமான ஆயுதங்களுக்கு ஆர்டர் கொடுத்ததுபோதுமாகத் தெரிகிறது.

அடுத்த ஆயுத சப்ளைகள் கப்பலில கராச்சி துறைமுகத்துக்கு அனுப்பப்படும்.

ஜெனரல் எட்ரூஸ் இன்னும் ஒரு வாரத்தில் ஹைதராபாத்துக்கு திரும்புகிறார்.

இந்தச் செய்தி கட்டாயம் மறுக்கப்படும்; ஆனால் முற்றிலும் உண்மை.

ராஜினாமா?

ஹைதராபாத், அக். 28—

நிஜாம் தூதுகோஷ்டி டில்லிக்குச் செல்வதை ஒத்திவைக்குமபடி நேர்ந்த கடைசி அபிவிருத்திகளை முன்னிட்டு, தாங்கள் ஹைதராபாத் பேச்சுவார்த்தைக கமிட்டியிலிருந்து வாபஸாக விரும்புவதாய் நிஜாமின் அரசியல் ஆலோசகர் ஸர். வால்டர் மாங்டனும், ஸர். சுல்தான் அஹமதும் நிஜாமுக்குத் தெரிவித்துவிட்டதாகத் தெரிகிறது.

ஹைதராபாத் மந்திரி சபையால திருத்தப்பட்டபடி பேச்சுவார்த்தைக கமிட்டி நிஜாமிடம் சமர்ப்பிக்த நகலில், இந்திய சர்க்கார் கோரின குறைந்தபக்ஷ நிபந்தனைகள அடங்கியிருப்பதால் அவர்கள் ஏற்கக் கூடுமென்றும், மேற்கொண்டும் மாறுதல்கள் செய்தால் இந்திய சர்க்கார் நிராகரித்து விடுமென்றும் இவ்வாருவரும் நிஜாமுக்குச் சொல்லிவிட்டதாயும் தெரிகிறது.

இந்திய சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதிலிருந்து தங்களை கூடிய சீகிரம் விடுவித்து விடும்படி ஸர். வால்டர் மாங்டனும் ஸர். சுல்தான் அஹமதும் நிஜாமைக் கேட்டுக கொண்டுளளனர்.

இதன் பேரில் நிஜாம் சர்க்கார் இந்திய சர்க்காருடன் புதிதாக பேச்சு வார்த்தைகள் நடத்த ஹைதராபாத் பேச்சு வார்த்தைக கமிட்டியை மாற்றியமைக்க யோசித்து வருவதாய் தெரிகிறது.

நேற்று டில்லிக்கு எடுத்துச் செல்வதாயிருந்த நகல் ஒப்பந்தமானது, இந்திய சாக்காருடன் புதிய பேச்சு வார்த்தைகளுக்கு அடிப்படையாய் அமைய மேற்கொண்டும் திருத்தப்பட வேண்டியிருக்குமென்று விவரமறிந்த வட்டாரங்களில் கூறப படுகிறது.

சதியாலோசனை

ஹைதராபாத், அக். 27—

இத்திஹாதுல முஸ்லிமின் கட்சியைச் சேர்ந்த மீரடி நடவடிக்கைக் கமிட்டியின் தலைவரான ஸ்ரீ யாமின் ஜுபேரி கராச்சியிலிருந்து நேற்று மாலை திரும்பினார். பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ஜின்னாவுக்குப் புறப்படுமுன் அவரை ஸ்ரீ ஜுபேரி சந்தித்ததாகவும் தெரிகிறது.

கராச்சியிலிருந்து திரும்பியதும் இத்திஹாதுல் முஸ்லிமின் கட்சித் தலைவர் ஸ்ரீ காஸிம் ரஜவியை அவர் சந்தித்து கராச்சி விஜயத்தின் விவரவை அறிவித்தார். பிறகு முஸ்லிமின் கட்சித் தலைவர் மலையிலேயே நிஜாமைப் பேட்டி கண்டார் இனறும நிஜாமை அவர் பேட்டி கண்டார்

இத்திஹாதுல் முஸ்லிமின் தலைவர்கள நேற்று இரவு அகாலம் வரை கூடிப் பேசினர் கராச்சியிலிருந்து ஸ்ரீ ஜுபேரி கொண்டுவந்துள்ள யோசனையை வைத்துக்கொண்டு இந்திய — ஹைதராபாத நகல் ஒப்பந்தமபற்றி அவர்கள் விவாதித்ததாகத தெரிகிறது.

நகல் ஒப்பந்ததத ஹைதராபாத் தூதுகோஷ்டியினர் நேற்றே டில்லிக்குக் கொண்டுபோயிருக்க வேண்டும். அதை நிஜாம் சர்க்கார் புனராலோசனை செய்வதாகத் தெரிகிறது

இந்திய யூனியனில் காஷ்மீர் சேர்ந்ததன் விளைவாக ஹைதராபாத - இந்தியா சம்பாவுணைகளின் தன்மையே அடியோடு மாறிவிட்டதாகவும் ஹைதராபாத சுதந்திரகத்துடன் இருப்பதற்கு அதன் மூலம் அதிக நியாயம் கிடைத்துவிட்டதாகவும் சிலவட்டாரங்கள் கூறுகின்றன

அஸஸாம் கவர்னர் தந்தி

வில்லாங், அக் 28—

காஷ்மீரடன் அஸ்ஸாம் மாகாணம் கொண்டுள்ள ஐக்கியத்தை நீடிப்பதுடன் சமஸ்தானத்தின் தற்போதைய நெருக்கடியில் அதற்கு உதவ அஸ்ஸாம் ஆவலாக இருப்பதாகவும் தெரிவித்து அஸ்ஸாம் கவர்னர் ஸர் அக்பர் ஹைதரி இன்று காஷ்மீர் இடைக்கால சர்க்காரின் தலைவருக்கு ஒரு தந்தியனுப்பியுள்ளார்.

கவர்னரின் தந்தி கூறுவதாவது:—அஸ்ஸாம் மக்களும் மந்திரிசபையும் நானும் உங்களது இந்த நெருககடி காலத்தில் உங்களை ஆதரிக்கிறோம் வலுவில் ஏற்பட்டுள்ள இந்த ஆக்கிரமிப்பை நீங்கள் திறமையுடன் சமாளிக்க நாங்கள் பிரார்த்தகக் கிறோம், நீங்கள் வெற்றி பெற நாங்கள் வாழ்த்துகிறோம். உங்கள் கஷ்டகாலத்தில் நாங்கள் செய்யக்கூடிய உதவி ஏதாவது இருப்பின் அதுபற்றி தபை செய்து எங்களுக்கு அறிவியுங்கள்.

இரும்பு கமிஷனர் ஆர். ஆர். சாரி கைது

மோசடி ஊழல் வழக்கு

சென்னை, அக். 28—

ஐ. மா. உருக்கு இரும்பு கமிஷனர் ஸ்ரீ ஆர். ஆர். சாரி, காளபூர் மாஜிஸ்டிரேட்டின் வாரணடு பேரில் இன்று காலை மைலாபூரில கைதியானார். அவர்மீது மோசடி ஊழல் முதலிய குற்றச்சாட்டுகள உண்டு; தக்கமறைவாக இருந்தவர் அவரை ஹதற்து ரேஞ்சு ஆபீஸ டெண்ட் போலிஸ கமிஷனர் ஸ்ரீ டபிள்யூ. கார்ல்ஸன கைது செய்தார் எதிரி ஒரு வருஷத்திற்கு இருநபர் ஜாமீன் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

ரங்கூனில கொளளைக் கூட்டத்தார் சிறுவர்களைத் தூக்கிக்கொண்டு போயும் கொலை செயதும வருகிறார்கள். ஏராளமான சிறுவர்களையும் சிறுமிகளையும் காணாது பெற்றோர்கள தவிக்கிறார்கள். சென்ற 14 தினங்களில் சாக்கடைக் குழிகளில 10 சிறுவர்களது பிரேதங்களை போலிசார் கண்டு எடுத்தனர்.

கோடீஸ்வரர் குமாரிக்கு திருமணம்

பண்டித நேரு, சரோஜினி நாயுடு வாழ்த்துச் செய்தி

அஹமதபாத், அக் 29

அம்பலால சரபாய் என்ற கோடீஸ்வரரின் குமாரி செல்வ பாரதி சரபாய்க்கும் திருடெண்ணின் எடொல்லுக்கு திருமணம் நடந்தேறியுள்ளது மணமகன் லண்டனிலபரசித்தி பெற்ற ஒரு தியேட்டர் சொந்தக்காரரான ஸர் ஒஸ்வால்டனெடொலின குமாரர். தம்பதிகள் இருவரும் இலக்கிய வடாரதலில் மிகப் பிரசித்தியான வர்கள்.

பழைய வேத முறைப்படி விவாகக கிரிகைகள் நடைபெற்றன பண்டித ஜவஹர்லாலும், சரோஜினி நாயுடுவும் மணமக்களை ஆசீர் வதித்து வாழ்தது செய்தி அனுப்பி இருந்தார்கள்.

ஐக்கிய தேச பொதுச் சபை

பாரிஸ் நகரில் அடுத்த வருடக் கூட்டம்

நியூயார்க், அக்: 29

ஐக்கிய தேச பொதுச் சபையின் அடுத்த வருடக் கூட்டம் பாரிஸ நகரில் நடக்கக்கூடும் என்று தெரிகிறது. டாலர் பஞ்சத்தால் அமெரிக்காவில தங்கள் சிப்பந்திகளை வைத்திருப்பதற்கு பல நாடுகளால் முடியாதிருப்பதால் அடுத்த கூட்டத்தை ஐரோப்பாவில் நடத்த அவைகள் விரும்புகின்றன.

[ராய்ட்டர்]

நீக்ரோ சித்திரவதை

வெள்ளையர்கள் ஆபாச நடத்தை

அபெர்டீன், மிசிசிப்பி அக் 28

ஜோன லேயிட் என்னும் நீக்ரோ 20 வெள்ளையர்களால சனிக்கிழமை இரவு கடுமையாகச் சித்திரவதை செய்யபட்டான்.

குறித்த நீக்ரோ ஒரு வெள்ளைக்காரப் பெண்ணை தாகியதாகச் சொல்லப்பட்டது ஆனால் அவன் எவ்விதபாவமும் அறியாதவன் என கோர்ட்டில் நிரூபணமாகியது இதன் பின்பே அவனை 20 பேர் வீட்டில் இருந்து வெளியாக்கி அடித்தும், புடைத்தும் தொல்லைசெய்தும் கடைசியாக முழங்கெலும்பிலும் கையிலும் துப்பாகிப் பிரயோகமும் செய்தனர். (ராய்ட்டர்

உலகைக்கு அதிக கடலை ஏற்றுமதி

இந்திய அரசாங்க முடிவு

எகிப்திய வெங்காய இறக்குமதி நிறுத்தப்பட்டது

கொழும்பு, அக் 31

1947 48-ம் வருஷங்களுக்கு இலங்கைக்கு இந்தியாவிலிருந்து அனுபவதென்று தீர்மானிக்கப்பட்ட நிலக்கடலை 500 டன் ஆகும் நிலக்கடலை எண்ணெய் 200 டன் ஆகும்.

இந்திய அரசாங்கம் இதனை இப்போது 1500 டன் கடலையாகவும் 500 டன் எண்ணெயாகவும் உயர்த்தி உள்ளது. சணல கயிறுதிரிலிருந்து தயாரிக்கப்பட்ட விரிப்புகள் முதலியவற்றின் மீதுள்ள கட்டுப்பாடு ரத்தாக்க பட்டதோடு அவற்றின் மீதுள்ள ஏற்றுமதித் தடையையும் இந்திய அரசாங்கம் வாபஸ பெற்றுள்ளது.

இப்போது இலங்கையிலுள்ள வெங்காயத தட்டுப்பாடு இனனும் சற்று அதிகரிக்கலாமென்றறண்ணப்படுகிறது இதற்குக் காரணம எகிப்திலே பரவியுள்ள மோசமான காலரா நோய் காரணமாக அங்கிருந்து வெங்காய இறக்குமதி செய்வதை இலங்கை அரசாங்கம் நிறுத்தியிருபதே உருளைகிழங்குகளும் எகிபதிலிருந்து இறக்குமதியாவது வழக்கம். அதுவும் தற்போதைக்கு இறக்குமதி செய்யப்படமாடாது.

ஆபீஸிற்கும் ஆகாயமூலம்!

ஹெலிக் கோப்டரில் அயர் பறந்தார்

லண்டன், அக். 28

ஹெலிக் கோப்டர் விமானமொன்றில் தமது லண்டன் காரியாலயத்திற்கு ஒரு இன்ஸ்டிமுரன்ஸ் உத்தியோகஸ்தர் பறந்து சென்றுள்ளார் ஹன்வோர்த மேல பகுதியிலிருந்து புறப்படடு 20 நிமிஷங்கழித்து தமது காரியாலயத்திற்குப் பக்கத்திலுள்ள ஓர் கார் விடும் மைதானத்தில் அவர் இறங்கியதாகத தெரிகிறது

(ராய்ட்டர்)

இளவரசி திருமணத்திற்கு விஜயம

பர்மா யூனியன் தலைவர் செல்வார்

ரங்கூன், அக் 28

பர்மா யூனியனின் முதலாவது தலைவர் ஸாஒஷ்வேதையிக ஸோபா இளவரசி எலிஸபெத் திருமணத்திற்காக லண்டனுக்குச் சமூகமளிப்பார் என்று உத்தியோகரீதியில் அறிவிப்படுகிறது அவருடன யாங்வே மகாதேவியும் செல்வார்.

(ராய்ட்டர்)

பாராளுமன்ற அங்கத்தினருக்கு சிறை

வியாபாரத்தில் உறவினருக்கு உதவி புரிய சதி செய்தார்

மூன்று சகோதரர்களுக்கும் தண்டனை

லண்டன், அக். 29

பிரிட்டிஷ பாராளு மன்றத்தின் தொழிற்கடசி அங்கத்தினரான 48-வயதுள்ள திரு விட்ஸ்மன் இன்று சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். பிரிட்டிஷ வாததக மந்திரி சபை அனுமதித்த அளவுக்கு மீறி உதடுக்கு வர்ணம் தீட்டும் [லிப்ஸடிக்] சாமான்களை வழங்கச சதி செய்ததாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குத தொடரப் பட்டிருந்தது. இவ்வழக்கை லண்டன் கிரிமினல் கோர்ட்டார் 4 மாதங்கள் ஆரம்ப விசாரணை செய்து, பிறகு சென்ற 5 வாரங்களாக விசாரணை நடத்தி தீர்ப்பளித்தார்கள். திரு விட்ஸ்மனுக்கு 12 மாதம் சிறைத்தண்டனையும் 500 பவுண் அபராதமும் விதிக்கப்பட்டது. அவருடைய மூன்று சகோதரர்களுக்கு 12 மாதமுதல் மூன்று வருடங்கள வரை தண்டனைகள் விதிக்கப்படடன.

திரு. விட்ஸ்மன் கோர்ட்டில் வாக்குமூலம் கொடுத்தபோது தான் தனது சகோதரர்களுக்கு வியாபாரத்திற்கு பணம் கொடுத்துதவியதாகவும் தனது தந்தை இறந்ததுமுதல் 13-வயதிலிருந்து தனது சகோதரர்களை தானே பராமரித்து வருவதாகவும் கூறினார். எல்லா எதிரிகளும் தாங்கள் சட்ட விரோதமாக யாதொரு குற்றமும் புரியவில்லையென்றும் கூறினார்கள்.

விசாரணையின் போது சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு தெரிவித்தார்:-

விட்ஸ்மனைத் தவிர மற்ற மூன்று எதிரிகளும் பங்காளிகளாகவுள்ள கம்பெனியின் பொய்க் கணக்கை எதிரிகள் சமர்பித்திருக்கலாறனர் இவர்கள் 20 லட்சம் "லிப்ஸ்டிக்"களை 17,000 பவுணுக்கு வாங்கியிருக்கிறார்கள்.

(ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

யூ. என். பி.யும் சென்டர்கள் தேர்தலும்

இடதுசாரிகளை ஒழிக்க இஷ்டம்போல சட்டத்தைத் திருத்துவதா?

சினிமாமுதலாளிக்கும்ஹோட்டல் முதலாளிக்கும் பதவிகள்

நேற்று முன்தினம் வெளிவந்த "திதாஸ" என்னும் சிங்களப் பத்திரிகை எழுதியதன் தமிழாக்கம்:

"விஜ"யின்படி பொதுமக்களின் வெறுப்புக்கு பாத்திரமானவர்களையேகவர்னர்தெரிவு செய்து விட்டார், இது அவர் வேலை. முதலாவது தெரிவில் தன் அத்தியந்த தோழனான ஸர் ஒலிவரை கவர்னர் மறந்து போகவில்லை. சேனநாயக்காவின் விருப்பத்தின்படி எப்படியும் ஸர். ஒலிவரை கவர்னர் தெரிவு செய்துவிட்டார்.

ஸர். ஒலிவருடன்நான்கு"ஸர்" பட்டதாரிகளை கவர்னர் தமக்குள்ள அதிகாரத்தின்படி தேர்ந்தெடுத்திருக்கிறார். மற்ற பதினொரு பேரும் தற்போது "ஸர்" பட்டதாரிகள் அல்ல வென்றாலும் உண்மையிலேயே ஏகாதிபதியப் பந்தம் பிடிப்பவர்களே! இவர்களில் அநேகர் அடுத்து வரும்"ராஜமங்கள"னதுதன்று சாம்ராஜ்ய எலும்புத் துண்டு என்னும் பட்டங்களை எதிர்பார்ப்பவர்களேயாவர்.

செனட்டராக தெரிவு செய்யப்பட்ட ஹோட்டல் காரரான விக்டோரியா என்பவர் ஆயிரக்கணக்காக செலவு செய்து சேனநாயக்கா மூப்பனாருக்கு மாலையிட்டதும், பெரிய சினிமாக்காரரான கார்டினர், கவர்னருக்கு விருந்துபசாரம் செய்ததும் சும்மாவல்ல எல்லாம கேவலமான பட்டம் பதவிகளுக்கே. இதுபோன்று மற்றவர்களும் வேறு தோற்றங்களில் "அர்ச்சனை" செய்யவில்லையென்று யாருக்கும் சொல்ல முடியுமா? ஆனபடியால மக்களின் ஆக்ரோசத்தில் ஆர்வமுள்ள பார்லிமெண்டு அங்கத்தினர்களால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை இந்த சென்டர்கள் அவலப்படுத்த மாட்டார்களென்று யாருக்குத்தான் சொல்ல முடியும்?

சேனநாயக்காவின் கபினெட் அங்கத்தவர்கள் தெரிவிலும் பார்க்க, கவர்னரின் சென்டர் தெரிவு மிகவும் படுமோசமாய் - வெறுப்புக்கு பாத்திரமாய் - கையாளப்பட்டிருக்கிறதென்று இப்பொழுது எல்லாவகையிலும் தெரிகிறது இவ்சம்பந்தமாக நியாய(சாதாரண பாவய)த்தை நிலைநாட்ட ஒரு நியாயஸ்தலம் ஏற்படுமானால், தண்டனை விதிப்பதற்காக ஆஜர் செய்யப்படவேண்டிய பிரதிவாதிகள் கவர்னரும் பிரதம மந்திரியும்தான் என்பது எல்லவழிகளிலும் தெரிகிறது.

சாதாரண மக்களுக்கு தெரியவில்லையென்றாலும், இவர்களால் செய்யப்பட்டிருக்கும் பாரதூரமான குற்றத்தை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

கபினெட் மந்திரி சபை தெரிவின் போது, செனட் சபையிலிலுருந்து இதுவரை கபினெட்டுக்கு சேர்த்துக் கொள்ள அரசியல் சட்டத்தின்படி பிரதம மந்திரிக்கு இடமுண்டு. எனினும், அவர் கொஞ்சமும் முன்பின் யோசியாமல் செனட்டர் தெரிவுக்கு எவ்வளவோ இருக்கும பொழுதே ஸர் ஒலிவரையும் திரு எல். ஏ. ராஜபக்ஷவையும் கபினெட்டுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்திற்கு முற்றும் முரணான இந்த நிர்மனகதை கவர்னரும் அனுமதிப்பதில் தீவிரமாய் நடந்து கொண்டார். இச்செய்கை பொதுமக்களுக்கு புரிய முடியாத பாரதூரமான பிரச்னையாய் இருக்கிறது.

பிரதம மந்திரியால் தெரிவு செய்யப்பட்ட மந்திரிகள் இருவரையும், கவர்னர் பின்புதான் செனட் சபைக்கு தெரிவு செய்தார். இப்படி செய்ததானது சேனநாயக்கா மூப்பனாருக்கு விருப்பியபடி செனட்டர்களை தெரிவு செய்ததற்கு கையாளப்பட்ட முறை என்று தேசம் முழுவதும் தெரிந்து கொண்டிருக்கிறது.

செனட் சபைக்கு அங்கத்தவர்கள தெரிவுசெய்யப்படுவதற்கு முன் கபினெட் சபைக்கு நியமிக்கப்பட்ட அவ்விரு மந்திரிகளையும் ஒரு சமயம் எதிர்பாராத விதமாக கவர்னரால் தெரிவு செய்யப்படாவிட்டால் அவர்களின் தலைவிதி என்னவாயிருக்கும்? ஸர். ஒலிவர் பொக்கிஷ மந்திரி பதவியை கைவிட்டதும், திரு. எல். ஏ. ராஜபக்ஷ நீர்வரசர் பதவியை கைவிட்டதும், ஆழமான பள்ளத்திற்கு விழக்கூடியதாய் இருந்தது. ஒருகாலமும் மறைக்க முடியாத அபகீர்த்திக்கு பாத்திரமாக விருந்தது. மன்னர்கள் யாரும் சிரிக்கக்கூடிய முஸ்பாத்தியாய் இருக்கும் எப்படியாயினும் அவ்விருவரின் சுயமதிப்பு காப்பாற்றப்பட்டுவிட்டது.

கவர்னரால் செய்யப்பட்டது இவ்வளவு மாத்திரமல்ல. அவரால் அரசியல் சட்டப் பிரமாணத்திற்கு முற்றும் முரணான இன்னுமொன்று செய்யப்பட்டிருக்கிறது அதாவது சென்ற 12 மாதங்களுக்குள் சம்பளமோ பணமோ அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து பெற்றிருப்பவர்கள் சென்டர்களாக முடியாது என்ற சட்டத்தை உடைத்துவிட்டதேயாகும் இப்படி நேற்று முன்தினம் வரைக்கும் அரசாங்கத்திலிருந்து சம்பளமோ பணமோ பெற்றவர்கள் கவர்னரால் தெரிவு செய்யப்பட்ட சென்டர்களில் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றெல்லாம் அலசிப் பார்க்கும்போது விஷயம் நன்றாகத் தெரியக்கூடும்.

அரசியல் சட்டப் பிரமாணத்திற்கு முற்றும் முரணாக இவர்கள் என்ன செய்தாலும் காரியமில்லை? எதற்காக பிணபு அவர்களுக்கு சட்டங்களைப் புரட்டி-மாற்றி-திருத்தி விடலாம் என்பதினாலதான் இதன்படி தற்போது இவர்கள செய்த தவறுகளை மறைப்பதற்கு அரசியல் சட்டங்களை மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள்; செய்கிறார்கள்.

சேனநாயக்கா கம்பெனிக்கு உசிதம் போல் அரசியல சட்டங்களை மாற்ற முடியுமாயினும் பொது மக்களின் வருப்பத்திற்கு தேவைக்கு சட்டங்களை மாற்றுவது எப்படியும் முடியாத காரியமாகும் இதற்கு உதாரணமாக அரசியல் குற்றத்திற்கு சிறைத்தண்டனை பெற்றவர்கள் பார்லிமெண்டு குகைகளுள் வருவதற்குள்ள தடையை அகற்றச் செய்த முயற்சி வீபரீதமாய்ப் போனதுதான் இப்படி பொது மக்களின் விருப்பத்தையும் கவனித்திருப்பாகளானால் டாக்டர் விக்கிரமசிங்கா இன்று பார்லிமெண்டில் இருப்பார் என்பது நிச்சயம்

பொதுமக்களின் தேவையை முன்னிட்டு சட்டங்களை மாற்றுவதுபோல் என். பி. காரர்களின் வேலையல்ல ஆனால் பொது மக்களிடையே மட்டற்ற செல்வாக்குள்ள இடதுசாரிகளின் அரசியல் உரிமைகளை தடை செய்வதில் அவர்கள் சமர்த்தர்கள்

துறைமுக அபிவிருத்தி ஆலோசனை

கொழும்பு, அக். 28

துறைமுக அதிகாரிகள் கூட்டமொன்று சமீபத்தில் நடைபெற்றபோது துறைமுக அபிவிருத்தித் திட்டங்களபற்றியும் துறைமுகத்தில் தங்கும் கப்பல்கள் வரிப்பணம் வசூல் முதலிய விஷயங்கள்பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டது என்று தெரிகிறது.

தனது குண்டே தன்னைக் கொன்றது

திரிகோணமலையில் நிகழ்ந்த சம்பவம்

திரிகோணமலை, அக் 29

திரு. விக்ஸ் எனபவரின் கீழ் வேலை பார்த்த ஜயவர்த்தனு என்னும் வேலைக்காரன் திடீரென தனது வேலையைவிட்டு விலகியதாகவும், விலகும்போது தனது சமபளத்தை எஜமானரிடம் கேட்டபோது முன்னறிவித்தல் கொடுக்கப்படாததால பணம் தரப்படமாட்டாது என்று கூறப்பட்டதாகவும் தெரிகிறது. இதனால் கோபமடைந்து பிரஸ்தாப வேலைக்காரன் திங்கடகிழமை இரவு வீட்டுள் புகுந்து ஒரு எறி குண்டை வீசியதாகச் சொல்லப்படுகிறது. அது வெடிக்கவில்லை திரு விக்ஸ் கதவைத் திறந்து சப்தம் என்ன என்று பார்க்கச் சென்றபோது இன்னோர் எறி குண்டு வீசப்பட்டது. அதுவும் வெடிக்கவில்லை.

இதற்கிடையில் திரு விக்ஸ் கூச்சலிட்டு, வேலையாட்களைக் கூப்பிட்டு எல்லோருமாக ஆளைப் பிடிப்பதற்காகத் துரத்தினர். ஜயவர்த்தனு ஓட்டம் பிடித்ததாகக் தெரிகிறது. இதற்கிடையில் இன்னோர் எறி குண்டு வெடித்ததாகவும் அதன் காரணமாக ஜயவர்த்தனு மாண்டு போனதாகவும் சொலப்படுகிறது. இவ்வெடிகுண்டு அவன் கையிலிருந்த வெடி குண்டு என்றே நம்பப்படுகிறது இறந்தவனது உடல் 15 கெஜ தூரம வரை தெறித்துக் கிடக்கக் காணப்பட்டது.

தேர்தல் ஏஜண்டைக் காணவில்லையாம!

தோற்ற அபேட்சகர் மனு

கொழும்பு, அக். 29

மன்னார் தொகுதி தேர்தலில் தோல்வியடைந்த திரு. சந்தியாகு விருஷபிள்ளைஎனபவரின் தேர்தல் ஏஜண்ட அவருடைய தேர்தல் கணக்குகளைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்கவில்லையென்றும் இப்பொழுது அவர் எங்கே இருக்கிறார் என்பது தெரியாததனால் தான் அக்கணக்குகளை சமர்ப்பிக்க முடியவில்லையென்றும் தமக்கு மனனிப்பளிக்க வேண்டுமென்றும் திரு விருஷபிள்ளை நீதிபதி திரு ஜயதிலகா முன் மனுச் செய்துகொண்டார். இவ்மனுவைபற்றி தேர்தல் அதிகாரிகளும் மற்ற அபேட்சகர்களும் மனுதாரர் அற்ற ககவேண்டுமென்றும் பத்திரிகைகளில் இந்த மனுவை பிரசுரிக்க வேண்டுமென்றும் அட்டார்னி ஜெனரலுக்கும் அனுப்பவேண்டுமெனறும் நீதிபதி உத்தரவிட்டார்.

ஆஸ்திரேலியாவுக்கு ஆங்கிலேயர் குடிபெற்றம்

கொழும்பு, அக். 29

இங்கிலாந்தில் இருந்து 1000 பேர் ஆஸ்திரேலியாவில் குடியேறுவதற்காகச் செல்கின்றனர். இவர்களில் குழந்தைகளும் குடும்பங்களும் உண்டு இவர்களை ஏற்றிச்செல்லும் கப்பல் இன்று காலை கொழும்புத் துறைமுகம் வந்து சேர்ந்தது.

தபால் சிப்பந்தியின் மோசடி

கொழும்பு, அக். 29

மூன்று மோசடிக் குற்றங்களின் காரணமாக ஒரு மத்திய தபால் நிலையச் சிப்பந்தி மீது 3 வருட நன்னடத்தைப் பிணை விதிக்கப்பட்டது. எதிரி தான குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டான். ஸி. ஏ. பொன்சேகா என்னும் இச்சிப்பந்தி மூன்று ரிஜஸ்டர் பாக்கெட் பொருளகளை சம்பந்தமாகவே மற்படி மோசடியைச் செய்ததாகக் கூறப்பட்டது.

கழனி தேர்தல் ஆட்சேபனை மனு விசாரணை

கொழும்பு, அக். 29

கழனி தொகுதி பாராளுமன்ற அங்கத்தனர மீது தாக்கல செய்யப்பட்டுள்ள தேர்தல் மனு நீதிபதி திரு. எச். எச் பஸநாயக்காவன முன் விசாரணைக்கு எடுக்கப்படும்.

ஆசிரியருக்கு கடிதங்கள்

ஐக்கிய தேசியமா, சொல்லும்?

ஐயா,

இலங்கையில் சமூக வேற்றுமை வளர்ந்து வருவது மெய். ஆனால் இந்தியாவைப் போல இரத்தப் பலி ஏற்படாதென எண்ணியிருக்க இலங்கை மக்களாலியலாத பருவம் வந்துவிட்டது போலும்! இதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சியே. இக் கட்சித் தலைவரும் மற்றும் கூட்டத்தினரும உலக்கதக்குத் தாம் சமூக வாதிகளல்ல, தேசிய வாதிகளெனத் தப்பறைவிததுப் பின் செய்கைகளில் மட்டும் தம் சமூகத் துவேஷத்தைக் காட்டுகின்றனர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராகிய சேனநாயக்காவை நான இலங்கை மக்களின் பேரில், தெய்வ நீதியின் பேரில், அரசியல் நீதியின்படி கேட்கிறேன், அவரைக் கீழ் வரும் வினாக்கட்கு உத்தரவு தரும்படியாக.

ஐயா, நாயக்கரே!

(1) நீர் உம்முடைய கட்சி தேசியக் கடசி ஆயின் சமூக துவேஷம் செய்யும் போலிகளுக்கு ஏன் மந்திரி பதவி கொடுத்தீர்? (அ) திரு பண்டாரநாயக்கா, "கடைசி இந்தியன் இலங்கையிலிருந்து வெளியேறு மட்டும நான் சுகமாய் உறங்க மாட்டேன்" என்றது பொய்யா?

(ஆ) சில மாதங்களுக்கு முன் குமாஸதாக்கள் வேலை நிறுத்தம் செய்தபோது "சிங்கள பலப" என்னும் (பண்டாரநாயக்காவின்) பத்திரிகை "தமிழ் குமாஸதாக்கள் வேலை நிறுத்தம் செய்தது திரு ஜீ ஜீ பொன்னம்பலத்தின் ஏவலால; ஆகையால சிங்களக் குமாஸதாக்களே! உடன் வேலைக்குத் திரும்புங்கள்" என்றது பொய்யா?

(இ) இதே சமயத்தில் நிதி மந்துரியான திரு ஜயவர்த்தனு சிங்கள மக்களே எழுங்கள! தமிழருக்கெதிராய் "துடக முறு முன் அணி" கூட்டச் சேருங்கள என்றது பொய்யா?

(ஈ) திரு குணசிங்கா இந்தியரை, "கெட்டவியாதிகளாகிய காலரா, அம்மை, பொங்குளிப்பான் முதலியவற்றைப் பரப்புவரும, சிங்களவருடைய இரத்தத்தைக் குடிக்கும் நாகபாம்புகளைப் போன்றவர்கள்" என்றதும் பொய்யா? இதே குணசிங்கா தேர்தல் போது கூட்டங்களில், "எனக்குத் தமிழினை வாக்குரிமை வேண்டாம், இந்தியனின் வாக்குரிமை வேண்டாம்; தமிழனுக்கும் கெச்சியானுக்கும் பிறந்த சிங்களவனின் வாக்குரிமை வேண்டாம், ஆனால் சிங்களவரின் வாக்குரிமை தான் வேணும்' என்றது பொய்யா? சமீபத்தில் நகர சபை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் திரு குணசிங்கா, 'சிங்கக் கொடியல்லாது வேறு எந்தக் கொடி பாராளுமன்றத்தில் நாட்டினும், அதை நான் என் படையுடன் பிடுங்கி எறிவேன்" என்றது பொய்யா?

(உ) திரு. கன்னங்கரா, "சிங்கள இளைஞரே! சிங்கக்கொடிக்காக உங்கள உயிரைப் பலியிட ஆயத்தப்படுங்கள்" என்றது பொய்யா?

இன்னும் விவரிப்பானேன்? இவர்களதானு "ஐக்கிய தேசியக்காரர்? இவர்கள் உம்முடைய கட்சி மந்திரிகளா? நன்று. இன்னும் ஏன வீணாய் நீவிர் சமூகபேத வாதிகளல்ல என்று பொய்ப்பிரசாரம் செய்கின்றீர்கள்?

2 நீர் இச்சமூகவாதிகளை இப்போலிகளை, உம்முடைய மந்திரி சபையினின்று நீக்குவீரா? உமது உண்மைக் கொள்கையைக் காட்டுவீரா?

3 சிங்கக்கொடிகளை இலங்கைக்குப் பொதுப் பணத்தில் வாங்கியதற்கு நீர் பாத்திரவாளியலலவா?

4 இவ்வாறுசெய்தபின், "சிங்கக் கொடி சிங்களவரின கொடி தேசியக் கொடியல்ல" என்று சமாதானம கூறுவதுதான் உமமுடைய தேசியக்கொள்கையா?

5 சிங்கள மகாசபை, இலங்கை முஸலிம் சபை முதலிய சமூகபேதக் கட்சிகள்டல உமமுடைய கட்சியுடன் சேர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சியென்ற பெயருடன் ஏமாற்றுவது தான நீர் கற்ற தேசியமோ?

6 இலங்கையில் சமூகக் கலப்பகம ஏற்படின் நீரும் உம்முடைய கட்சியுமின்றி வேறுயார் பொறுப்பாளிகளாவர்?

"பூமியிலவறகுமினி அடிமை செயயோம்" என்று உலகுக்குச் செய்தியனுப்பிய தமிழ் மக்கள் உம்முடைய ஐக்கிய தேசியக் கட்சிக்கா அடிமையாவார்கள்?

இப்படிக்கு,
தா. சொக்கலிங்கம்.

30-10-47
மருதனை.

எச்சரிக்கை

ஆசிரியருக்கு,

ஐயா,

25-10-47ல் கொழும்புடவுண் ஹாலில் 'லங்கா ஜாதிக சமரக்ஷக மண்டலய" சங்க ஆதரவில் நடந்த ஓர் கூட்டத்தில், "வாள் ஏந்திய சிங்கக் கொடியையே தேசியக் கொடியாக பாராளுமன்ற இறப்பு விழா வின்போது ஏற்றுவிப்பேன். அதற்குப் போட்டியாக வேறெந்தக் கொடியையும் பறக்கவிடேன்-அப்படிப் பறப்பின் அவற்றை நிர்மூலம் செய்ய சிங்கள வலிபர்கள் ஒன்றுசேர்ந்து ஆயத்தமாக இருக்கல வேண்டும்" என்பாராஞ்மன்றப் பிரதிநிதியொருவர் பேசியுள்ளதை 26-10-47 'டைம்ஸ ஆப் சிலனில்' பார்த்தேன்.

தேசத்தின் வளர்ச்சியையும் பொது நோக்கையும் அடிப்படைக் கெள்கையாக கொண்டுள்ள எந்த சமூகத்தவனும் இவ்வித அறைகூவலுக்குமெளனஞ் சாதியான்.

இலவகை அரசியல் ஸ்தாபனங்களில் இப்பொழுது பறந்து கொண்டிருக்கும் ஆங்கிலக் கொடி இவரின் பார்வையில் படவில்லையோ! பட்டிருந்தால் "வேறெந்தக் கொடியாயினும்' என அவர் குறிப்பிட்டது 'இலங்கையை ஆண்ட எல்லை அரசன் பாவித்த கொடியாகவே இருத்தல் வேண்டும் இவ்வித துவேஷ மனப்பான்மை உடைய இப்பெரியாரா இலங்கையின் சுமுகமான வாழ்விற்கு பாடுபடப்போபவர். சுயலாபமிதுதியினால் தன் பார்வையை பேழந்தகுருடராகிவிட்டார். ஆனால் அவரால் தூஷிக்கப்படும் தமிழர் அவ்விதமிலை அவர்கள் தன் தாய் நாடினதும் அதில் வாழும் மக்கள் கூட்டத்தினதும சம வளர்ச்சியின் மேல் கருத்துளளவர்களாய் அந்தொண்டிற்காகவே தம் காலங்களை செலவழித்து வந்தவர்கள், வருகின்றவர்கள். அத்தகைய மக்கள் தங்கள் சுயமரியாதையைக் காப்பதற்கு எக்கைபுதியாகத்தை வேண்டுமாயினும் செய்வதற்கு பின்னடையார். 'மானந்துடைப்பதோர் வாள்'-என்னும் முது மொழியில் உறுதி பூண்டுள்ள தமிழர் தம சமூகசதின் கௌரவத்திற்கும்-தாய் நாட்டின் ஒற்றுமைக்கும் எங்கு முண்டாக்கூடிய எந்தவிதமான சின்னங்களையும் 'இலங்கை மண்மேல் பறக்க விட ஒப்பார்கள்'.

இத்தெய்வ கைங்கர்யத்திற்காக மற்றையோரின் கூட்பாடின்றியே தியாகக் கனலின் முன் தங்களையும் தங்கள் அனைத்தையும் தானஞ்செய்யத் தயங்கார்கள்.

இங்ஙனம்,
வி. எல். மாசிலாமணி
திரிகோணமலை. 28-10-47

நம்பிக்கைத் தீர்மானத்தின கதி

ஐயா!

பிரதமர் சேனநாயக்கா மேலும் அவர் மந்திரி சபையினர் மேலும் ஓர் நம்பிக்கைத் தீர்மானத்தை திரிகோணமலை நகர சபைக் கூட்டத்தில் திருவாளர் கனகசிங்கம் அவர்கள்கொண்டு வந்த பொழுது தலைவர் திரு மாணிக்கராஜா அவர்கள் ஷ்டி தீர்மானம் சபையின் நடவடிக்கைகட்கு அப்பாற்பட்டதெனக் கூறி அதை ஏற்க மறுத்துவிட்டார்.

பிரதமரின் அரசாங்கத்தை பொதுவாக இலங்கை மக்களும் குறிப்பாக திரிகோணமலை மக்கள் எவ்வளவு தூரம் வெறுத்துள்ளார்கள் எனபதை சென்ற தேர்தல் மூலம் உலகிற்கே காட்டிவிட்டனர். இத்தகைய மக்களின் நகர சபைப் பிரதிநிதியாகவுள்ள இவர்-மக்களின் விருப்பிற்கு மாறான ஓர் கூட்டத்தாரின் மேல் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்தது "பந்தம் பிடித்து பதவி வேட்டையாடப்போலும்."

பொதுமக்களின் மனோநிலையை அறிந்து புத்திசாலிகளாகவும் சுய மரியாதை நோக்குடனும் நடந்துகொண்ட தலைவர் மாணிக்கராஜா அவர்களமேல் குற்றம் காட்டுவதற்காக "நகர சபையால் பொது மக்கள் வசிப்பதற்கெனக் கட்டப்படும் வீடுகளின் சுணக்கத்திற்கு முழுப் பொறுப்பாளி தலைவரே என திரு. கனகசிங்கத்திற்கு பந்தம் பிடிக்கும்-அங்கத்தவர் ஏகாம்பரம் உண்டாக்கிய பொய் பிரசாரத்திற்கு தலைவர் தக்க மறுமொழி கொடுத்ததலை குனியச் செய்துவிட்டமையால் இருவரும் வெற்றிகரமாகப் பின்வாங்கிக் கொண்டனர். இனிமேலாகுதல் இவர்கள் ஏமாறப் பங்காளராவார்களா?

உண்மை விளம்பி

சோனகதெரு,
திரிகோணமலை.
28-10-47

பழைய மந்திரியின் பித்தலாட்டம்

கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பழைய கல்வி மந்திரி திரு கன்னங்கரா பின்வருமாறு கூறினார்:-

"யாழ்ப்பாணத்தில் கூட சிங்கக் கொடிதான் உயர்த்தப்பட்டிருந்தது என்பதற்கு என்னிடம் அத்தாட்சிகள் உண்டு சம்புமல் குமாரன் என்னு சிங்கள அரசிளங்குமாரன் வடமாகாணத்தில் சிங்களக் கொடியை உயர்த்தினான் என்பது "சலலீஹினி சாந்தேசய" என்னும் சிங்களக் காவியத்தில் கூறப்பட்டிருக்கிறது."

மேற்கூறிய கூற்று அக்காவியத்திலில்லை காவியத்தை உற்று நோக்கிப் படித்தால் உண்மை விளங்கும் சம்புமல் குமாரன் யாழ்ப்பாணம் சென்ற விஷயத்தைப்பற்றி 29-ம் பாடல் கூறுகிறது. அப்பாடலின் மூன்றாவது வரி சிங்களப் பாஷையிற் பின்வருமாறு:— "பல பிரிசென் சக யாப்பாடுண் கென" அதன் மொழிபெயர்ப்பு:- "யாழ்ப்பாணத்தை அடக்கி வலிய சேனையுடன் திரும்பினான்."

மேலும் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி உயர்த்தப்பட்டிருந்தாலும், அக்கொடியைத் தமிழர் ஏற்றுக்கொள்ளவேண்டும்? ஒரு தேசம் இன்னொரு தேசத்தாற் கைப்பற்றப்பட்டால் பின்னதன் கொடி முன்னதில் உயர்த்தப்படும். ஆனால் பின்னொரு காலம் அடிமைத் தேசம் சுதந்திரமடைந்தால் பின்னதன் கொடியைத் தாமதமின்றி அகற்றிவிடும். ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றினார்கள் சிம்மக் கொடியை அகற்றி ஆங்கிலக் கொடியை நிறுத்தினார்கள். திரு. கன்னங்கரா ஏற்றுக்கொள்வாரா?

த. கனகலிங்கம்.
பம்பலப்பிட்டி.

13 வயதுச் சிறுமிக்கு கலியாண அனுமதி

அநுராதபுர கோர்ட்டு நிகழ்ச்சி

அநுராதபுரம், அக். 30

அநுராதபுரம் மஜிஸ்டிரேட் கோர்ட்டில் வெரிட என்ற முஸ்லிம் இளைஞனும் சிலாவதி என்னும் 13 வயது சிங்களச் சிறுமியும் ஆஜர் செய்யப்பட்டனர். குறிப்பிட்ட முஸ்லிம் யுவன் சிறுமியைக் கற்பழித்ததாகக் கூறப்பட்டது. ஆனால் சிறுமியும், இளைஞனும் தாம் ஒருவரையொருவர் மணந்து கொள்ள விருப்பமாக இருப்பதாகத் தெரிவித்தனர்.

பெண்ணின் பாட்டியார் இதற்கு தமது சம்மதத்தைத் தெரிவித்தார். அதன்பேரில் போலீஸார் எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை.

சிறுமி தான் இஸ்லாம் மதத்தை தழுவ தயாராய் இருப்பதாகவும் யுவன் கலியாணத்தை நிறைவேற்ற இரண்டு நாட்கள் தேவை என்றும் தெரிவித்தான்.

மாஜிஸ்டிரேட் தமது வாழ்த்தைத் தெரிவிக்க அக்டோபர் 28ல் மணத்தை முடித்துக் கொண்டு தம்பதிகள் கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று தெரிவித்தார்.

சென்டர்கள் தெரிவு

முனிசிபல் சபைக்கு வரும் தீர்மானம்

கொழும்பு, அக் 29

கொழும்பு முனிசிபல் சபையின் அடுத்த கூட்டத்தில் எடுத்துக் கொள்வதற்காக திரு பி. ஜீவேந்திர சிங்கா கொண்டுவந்துள்ள தீர்மான மொன்றில் நற்பொழுது செனட் சபைக்கு தெரியப்பட்டவர்கள் சம்பந்தமாக கையாளப்பட்டுள்ளதென்று கூறப்படும் ஊழலான நடத்தைகளை விசாரணை செய்ய ஒரு கமிஷனை கவர்னர் நியமிக்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

ஜவுளிக் கட்டுப்பாட்டு இலாகாவில்மோசடிவேலையா?

கொழும்பு, அக் 29

ஜவுளிக் கட்டுப்பாட்டிலாகாவில நடந்துள்ள ஒரு களவு வேலை காரணமாக எம். டி. ஏ. மாண்சூர் என்னும் புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத் தெரு வாசியும், ஜவுளி இலாகா குமாஸதாடி. டி. ஏ. பெர்னாண்டோ என்பவரும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சமன்ஸ் அனுப்பப்பட்டுள்ளது. வழக்கு நவம்பர் 5-ம் தேதி எடுக்கப்படும்.

திரு. கன்னங்காராவின் முறைப்படி ஒரு தேசத்து மக்கள் தம் நாட்டைக் கைப்பற்றின. நாட்டின் கொடியை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன்பிரகாரம் ஆங்கிலேயர் 1815-ம் ஆண்டு கண்டியில் உயர்த்தின கொடியை திரு. கன்னங்கரா ஏற்றுக்கொள்வாரா?

த. கனகலிங்கம்.
பம்பலப்பிட்டி.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும்
தும்பால் செய்யப்பட்ட சாமான்களும்
நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்
ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த
நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
தேடா கயிறு, கம்பை, வடம், ஈகில்தடி,
தும்புத்தடி, கயிற்றுபபாய், காப்பற், கால்மிதி
இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
இத்தோடு திறம் லங்கா பிராண்ட் வினாகரியும்,
கை பேக்ஸ்களும் கிடைக்கும்.
மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை
வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு
விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota,
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

யாழ்ப்பாணப் பாணிப் பனட்டும் ரடியல் மாவும் போத்தலில் அடைத்த சிங்கப்பூரக்கும் இலங்கைக்கும் அனுப்பி வியாபாரம் செய்ய பங்காளிகள் தேவை விபரங்களுக்கு:- 201, கால் ரோட், கொள்ளுப்பிட்டி.

தோட்டத் தொழிலாளி நிலை உயரவேண்டும்

அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் தீர்மானம்

பார்க்கர் இன்னபெக்டர்கள் மகாநாடு கூட்ட இலங்கையின் ஆலோசனை

டில்லி, அக் 29

ஆசிய நாடுகளின் தொழிலாளர்களது வாழ்க்கைத் தரத்தை படிப்படியாக உயர்த்த வேண்டுமென்று சீன சர்க்கார் பிரதிநிதி லாவோ கூவா இன்று ஆசியா தொழிலாளர் மகாநாட்டில் பேசியபோது தெரிவித்தார். அடுத்த மகாநாடு சீனாவில் கூடவேண்டுமென்று சீனப் பிரதிநிதி அழைத்தார். பர்மா பிரதிநிதியான பர்மா தொழில் மந்திரி மான்வின் அடுத்த மகாநாட்டை பர்மாவில் கூட்டும்படி அழைத்தார்

நகல் தீர்மானங்கள்

ஜப்பானில் ஜனங்களது தேவைக்கு மிஞ்சிய கைத்தொழில் அபிவிருத்தி ஏற்படாமலிருக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென சீனப் பிரதிநிதி ஒரு நகல் தீர்மானத்தைச் சமர்ப்பித்தார்.

தோட்டத் தொழிலாளர்கள்

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குள்ள சட்டங்களைப்போல தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் சட்டங்கள் செய்ய வேண்டுமென்றும் அவர்களது நிலைமையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் ஒரு நகல் தீர்மானத்தைச் சமர்ப்பித்தது.

நிரந்தர ஆசிய தொழிலாளர் மகாநாட்டின் நிர்வாகக் கமிட்டி அமைக்க வேண்டுமென்றும் ஆசியாவிலுள்ள பூர்வீக ஜாதியார் அபிவிருத்திபற்றியும் ஆசிய நாடுகளின் கடற்கரைப் பகுதியிலுள்ள படகோட்டிகளின் அபிவிருத்திபற்றியும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் மற்றொரு நகல் தீர்மானத்தையும் சமர்ப்பித்தனர்

தொழிலாளர் வீட்டு வசதி, சுகாதாரம், வைத்திய வசதி, இலவசக் கட்டாயக் கல்வி வாழ்க்கைப் பாதுகாப்பு வசதியான சம்பளம் இவைகள் சம்பந்தமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென இந்திய சர்க்கார் ஒரு நகல் தீர்மானத்தைச் சமர்ப்பித்தனர்.

தூரகிழக்கு நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் விவசாயிகள் இவர்களின் நிலைமையை ஆராய தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்களின் மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று இலங்கை சர்க்கார் பிரதிநிதி ஒரு நகல் தீர்மானம் சமர்ப்பித்தார்.

இலங்கை தொழிலாளர் பிரதிநிதி டாக்டர் சி. ஜே. சி. டி சில்வா மகாநாட்டில் பேசிய போது, எல்லா ஜனங்களுக்கும் நன்மை பயக்கும்படியாக அரசாங்கம், முதலாளிகள், தொழிலாளர் ஆகிய மூன்று பிரிவினரும் பொதுவாக ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டுமென்றும், ஒருவர் கடமையைச் செய்யாது உரிமையைக் கோர முடியாதென்றும் தெரிவித்தார். [அ-பிரஸ]

ஸ்தல ஸ்தாபனக் கமிஷனுக்குக் கண்டனம்

முனிசிப்பல் ஊழியர் கூட்டத்தில பேச்சு

கொழும்பு, அக் 30

கொழும்பு முனிசிப்பல் ஊழியர் சங்கக் கூட்டம் ஒன்று நடு அல்பிரெட்ஸ் பெரிஞன்ஸ் சதுக்கமயில் நேற்று டவுன் ஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

முனிசிப்பல் அங்கத்தினர் கொரிச் சொளசா பேசுகையில் "ஸ்தல ஸ்தாபன சேவைக் கமிஷன் ஸ்தல ஸ்தாபனங்கள் மீது பலவந்தமாய் திணிக்கப்படிருக்கிறது இதனால் எவ்வித பலனும் இல்லை. ஊழியர்களின் முதல் வது அவசிய தேவை கமிஷனில் இருந்து பிரிவதற்கு நடவடிக்கை எடுப்பதே" என்று குறிப்பிட்டார்.

காமன்ஸ் சபை

"ராஜினாமா செய்" என்று எதிர்க்கட்சி கூச்சல்

பெட்ரோல் சிக்கன தீர்மானத்தில் அரசாங்கத்திற்கு 24 வோட்டுகளே அதிகம்!

இந்தியாவில் ரஷியா புகுந்துவிடுமென்று அஞ்சுவதாக ஜனாப் ஜின்னா சொன்னாராம்!

கன்சர்வேடிவ் அங்கத்தினர் பூச்சாண்டி காட்டுகிறார்

லண்டன், அக் 29

துப்பேசி விட்டார் நான் லண்

காமன்ஸ் சபையில மன்னர் டன் திரும்பும் சமய ஜனாப் பிரசங்கத்தின் மீது எதிர்க்க ஜின்னாவைக்கண்டு பேசினோம் கட்சி கொண்டுவந்த திருத்தப அவர்கள் ஏராளமான திறமை பிரேரணை விவாதிக்கப்பட்டு யுள்ள பரிட்டிஷ் அதிகாரி இன்று நிராகரிக்கப்பட்டது ஞுக்கு தகுந்த சப்பளமும் வ அதற்கு சாதகமாக 318 வாக்கு யுமளித்தது வேலைக்கார்கள் ளும் பாதகமாக 201 வாக்கு கொண்டிருக்கிறார்கள் பிரிட்டிஷ் கரும் கிடைத்தன. நேற்று அதிகாரிகள் பாக்கிஸ்தானுக்கு தரு. சர்ச்சில் இப்பிரேரணை அரிய சேவை புரிகிறார்கள் யைப் பிரேரித்தார். இரு தின பாக்கிஸ்தானுக்கு பிரிட்டிஷ் ங்கள் விவாதங்கள் நடைபெற் சாம்ராஜ்ய நடுகள் உதவி றன. தொழிற்கட்சி அரசாங் செய்வதில் சாம்ராஜ்யத்தில் கம் பாரபட்சமான தென் பாக்கிஸ்தான் இருந்து பய றும் தலைமை வகித்து நடத் னென்னவென்று ஜனாப் ஜின்னா தும் சகலியற்றதென்றும் நீர் தனது வேண்டுகோள் புறக்க வாசத் திரையில் ததென் ணிக்கப்பட்டதற்கு அப்பிப் றும், பொருளாதார நெருக்க ரயம் கூறினார் பாக்கிஸ்தா டியைச் சமாளிக்க உறுதியளிக் னில் அராஜகம் ஏற்பட்டால் காதிருக்கிறதென்றும் அரசாங் இரண்டே வாரத்தில் ரஷிய கத்தை திருச்சர்சில் டலமா கள் டில்லிக்குள் புகுந்துவி கத் தாக்கிப் பேசினார். வார்கள் என்று ஜனாப் ஜின்னா கவலைப்படுகிறார். அதை அவர் எனிடம் தெரிவித்தார் நம் மிடம் பலம் பொருந்திய ஆகாய படை வேண்டும் இந்தியா வில் அபாயம் நேரிட்டால் நாம் அமெரிக்கர்களுடனும் மற்றும் உதவிபுரிய வரும்படி நாடுகளு டனும் அங்கு செல்லவேண்டும் ஜின்னாவின் வேண்டுகோளின் படி பிரிட்டன் அங்கு மந்திரியர் தர்களை அனுப்ப வைக்க வேண்டும்

மற்றுமோர் கன்சர்வேடிவ் அங்கத்தினர் பேசியபோது பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கத்தின் தோல்வி வாக்கு திகள் காவும் காற்றில் பறந்து விட்டன என்றும் பிரிட்டன் இப்பொழுது முந்திய பிரதம மந்திரியான சர்ச்சிலையே விரும்புகிறதென்றும் தெரிவித்தார்

இரு அங்கத்தினர்கள் பத்திரிகைகளுக்கு அரசாங்கத்தின் அந்தரங்கச் செயல்களை தெரிவித்ததற்காக நாளை அவர்களை காமன்ஸ் சபை விசாரிக்கும் முடிவு தெரிவிக்கும்

(ராய்ட்டர்)

வருமான வரி செலுத்த தவறியதாக வழக்குகள்

கொழும்பு, அக். 30

வருமான வரி செலுத்த தவறியதாகக் கூறப்பட்ட எட்டுப் பேர் நேற்றுக் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரிக்கப்பட்டனர்.

இதில் மருதானை பிச்சர்ன் லேனைச் சேர்ந்த எம் எச் எம் நஹார் ஏற்கனவே கடனிறுக்கச் சக்தி அற்றவர் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அவர் சார்பில் ஆஜரான திரு. சுப்பிரமணியம் கூறினார்.

இவ் வழக்கு நவம்பர் 12-ம் தேதி அடுத்த தடவை விசாரிக்கப்படும்.

கறுவாக்காட்டைச் சேர்ந்த எம் எச். எம் மொஹிதீன் 15,428 ரூபாய் செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டது இது சம்பந்தமாக அவர் ஓர் செய்தி கொடுத்திருப்பதால் நவம்பர் 5-ம் தேதியே இது விசாரிக்கப்பட வேண்டும் என்று ஒத்திப் போடப்பட்டது.

இதர 6 நபர்களின் பெயருக்கு செலுத்த வேண்டிய தொகையும் கீழே தரப்படுகின்றன இவர்களில் திரு ஜானை தவிர்ந்த மற்றவர்களுக்கு மீதுள்ள வழக்குகள் நவம்பர் 12-ம் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

கே. எஸ். எம். ஜானை, தெமட்டகொட வீதி, ரூ 3981-73; ஈ பி. சிவா, கடற்கரைத் தெரு, ரூ 1317-89; ஏ எம் ஏ அப்துல் காதர், குமாரவீதி, ரூ. 990; டி. சுன்னங்கரா, கோட்டை, ரூ. 489; ஓ. பி அப்புண்ணி நாயர், புதிய சோனகர் தெரு, ரூ. 393.

செய்திச் சிறட்டு

நவம்பர் 24-ம் தேதி பலப்பை தலைநகரான மணிலாவில் நடைபெறும் ஆசிய பொருளாதார கமிஷன் கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதி கலந்து கொள்வார்

* * *

நேற்று கலிபோர்னியா, நியூயார்க்கிலிருந்து வந்த 'எக்ஸ்பிரட்டர்' கப்பலினில் 2000 மூட்டை சிமந்தியும் மற்றும் பால் பவுடர், உடுபுடவைகளும் கொழும்புக்கு வந்திறங்கியிருக்கின்றன. நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவிலிருந்து 8500 டன் கோதுமை மாவு வந்திறங்கியது. தென்னாப்பிரிக்காவிலிருந்து இலங்கைக்கு 6682 டன் சீனிக்கரியும் 180 டன் உருளைக்கிழங்கும் வந்திறங்கின.

இலங்கைக்கு 42 டன் வெண்ணையும் 5 டன் டின் வெண்ணையும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியாவிலிருந்து இரண்டாவது பாதி வாட்டோட்டா வெண்ணெய் வரவில்லை நவம்பர் 10-ம் தேதிக்குள் அங்கிருந்து 200 டன் வெண்ணையும் 800 பெட்டி டின் வெண்ணையும் வந்து சேரும் முக்கியமான உணவுப்பொருட்களை வரவழைக்கும் ஏற்பாடுகளை அரசாங்கத்தார் வருடம் ஒன்றுக்கு கோடி ரூபாய் நஷ்டமாகிறது

* * *

திரு ஜார்ஜ் ஆர். டி சில்வா எக்சிகியூட்டிவ் மந்திரியின் பாராளுமன்ற காரியதரிசியாக நியமிக்கப்பட்டுவிட்டதால், கொழும்பு நகர சபையில் அவர் வகித்த ஸ்தானத்திற்கு ஒரு பதில் அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கப்படும். கொட்டாஞ்சேனை மேற்குத் தொகுதியில் அது சம்பந்தமாக நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு ஆளர் அபேட்சகர்களாக மூன்று வருவதாகத் தெரிகிறது.

* * *

குடியிருப்போர் வீட்டு வாடகை கொடுப்பது சம்பந்தமாக அவர்களுக்கு கட்டணமின்றி இலவசமாக கொழும்பு நகர சபைத் தகவல்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படிருக்கிறது

* * *

ஜப்பானுடன் இலங்கை வர்த்தக உறவு ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் இரு பிரதிநிதிகளை ஜப்பானுக்கு அனுப்பவைக்கும். கூட்டுறவு மொத்த விற்பனை சங்கத்தின் சார்பாக கூட்டுறவு அபிவிருத்தி உதவிக் கமிஷனர் திரு. எச். ஜினதாஸாவு, சிங்கள வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த திரு. பிளியூ. எச் புத்ததாஸாவும் பிரதிநிதிகளாகச் செல்வார்கள்.

* * *

தென்னாப்பிரிக்காவுடன் வர்த்தக அபிவிருத்தி ஏற்படுத்த ஒரு பிரதிநிதியை அனுப்பிவைக்க வேண்டுமென இலங்கையும் உறுப்பு சங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * *

ஆசியா தொழிலாளர் மகாநாட்டுக்கு அகில இலங்கை தொழிற் சங்க காங்கிரஸைச் சேர்ந்த டாக்டர் வீ ஜே டி சில்வாவை இலங்கைத் தொழிலாளர் பிரதிநிதியாக அரசாங்கம் அனுப்பிவைத்திருப்பதை ஆட்சேபித்து இலங்கை தொழிற் சங்க பெடரேஷனும் இலங்கை இந்தியன் காங்கிரஸ் தொழிலாளர் சங்கமும் மகாநாட்டு நிர்வாகிகளுக்குக் கடிதங்கள் அனுப்பியிருக்கிறார்கள். அகில இலங்கை தொழிற் சங்க தலைவர் திரு. ஏ. ஈ. குணசிங்கா இலங்கை தொழிற் சங்க பெடரேஷனை மலையாளிகள் ஸ்தாபனமென்றும் இலங்கை இந்தியன் காங்கிரஸ் இந்திய தோட்டத் தொழிலாளர்கள் ஸ்தாபனமென்றும் இந்த இரண்டும் அந்நியர்கள் ஸ்தாபனமென்றும் தனது சங்கமே இலங்கைத் தொழிலாளர் ஸ்தாபனமென்றும் தெரிவிக்கிறார்.

சோவியத் ஸ்தானிகர் வரவேற்பு

டெஹ்ரான், அக். 28

பாரசீக ஷாவின் பிறந்த தினத்திற்கு ரஷிய ஸ்தானிகர் கலந்து கொள்ளாததன் காரணம் அவருக்கு ஏற்பட்ட சுகயீனமே என்று பாரசீகப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

(ராய்ட்டர்)

ஜினிவா சர்வதேச வர்த்தக மகாநாட்டின் வெற்றி

சுங்க வரிபற்றி 25 நாடுகளுக்கிடையே 123 ஒப்பந்தங்கள்

தென்னாப்பிரிக்காவுடன் இலங்கை ஒப்பந்தம் செய்து கொண்டது; இந்தியா செய்யவில்லை

அமெரிக்க ஜனாதிபதியின் அகமகிழ்ச்சி

ஜினிவா, அக். 29

ஜினிவாவில் நடைபெற்ற உலக வர்த்தக மகாநாட்டில் 23 நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட சுங்க வரி ஒப்பந்தங்களை பற்றி இன்று அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. சுங்க வரிகளின் விகிதங்கள் சலுகை வரி விகிதங்கள் முதலியவைகளை ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன அவை நவம்பர் 18-ம் தேதிவரை அந்தரங்கமாகவே இருக்கும். மகாநாட்டில் கலந்துகொண்ட 23 நாடுகள் 104 ஒப்பந்தங்களையும் கலந்துகொள்ளாத பர்மா, சென் ரொடேலியா ஆகிய இரு நாடுகளும் 19 ஒப்பந்தங்களும் செய்துகொள்ள முடிவு ஏற்பட்டிருக்கிறது 25 நாடுகளும் செய்யும் 123 ஒப்பந்தங்களும் நாளை பூர்வாங்கமாக கையொப்பத்துகளிடப்படும். அவைகள் 300 பக்கங்களடங்கிய புத்தக ரூபத்தில் பின்னர் வெளியிடப்படும்

ஆஸ்திரேலியா, பெனலக்ஸ், (பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க்), பிரேசில், கானடா, சிலி, சைனா, பிரான்ஸ், லெபானன்-சிரியா, யூனியன், நியூஜிலந்து, நார்வே, பிரிட்டன் அமெரிக்கா ஆகிய 12 நாடுகளுடன் இந்தியா சுங்க வரி ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கிறது. தென்னாப்பிரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் உறவு முறிந்திருப்பதால் இந்த இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படவில்லை

தென்னாப்பிரிக்காவும் ஆஸ்திரேலியாவும் நியூஜிலந்தும் இலங்கையுடன் சுங்க வரி ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கின்றன.

காமன்ஸ் சபையின் அறிக்கை

லண்டன், அக் 29

பிரிட்டிஷ் வர்த்தக மந்திரி திரு ஹரோல்ட் வில்சன் இன்று ஜனிவாவில் நடைபெற்ற உலக வர்த்தக மகாநாட்டில் பிரிட்டன் செய்துள்ள ஒப்பந்தங்களை பற்றி அறிவித்தார் 25 நாடுகளுக்கிடையே 123 ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் பல்லுக்குப் போதிய அனுமதிகளைப் பெறக்கூடிய முறையிலேயே ஏகாதிபத்திச் சலுகை வரிகளைக் குறைக்க சம்மதித்திருப்பதாகவும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கிடையே பொருளாதார ஐக்கியம் இன்னும் அடையவேண்டும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி மகிழ்ச்சி

வாஷிங்டன், அக் 29

ஜினிவாவில் இன்று 23 நாடுகளுக்கிடையே சுங்க வரி ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக ஏற்பட்டிருப்பது கண்டு அமெரிக்க ஜனாதிபதி மகிழ்ச்சியடைந்தார் இப்பொழுது இருந்துவரும் உலகப் பொருளாதார நெருக்கடியான நிலையில் இந்த சர்வதேச வரி ஒப்பந்தம் பெரும் ஆறுதலளிக்குமென்றும் நாடுகளின் பொருளாதார உறவுக்கு இனி வசதி ஏற்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஜினிவாவிலுள்ள அமெரிக்கத் தூதுக்கோஷ்டி தலைவர் பிரெஸண் பிரவுமாறு கூறினார்:- ஆயிரம் கோடி டாலர் பெறுமதியுள்ள வர்த்தக சம்பந்தமாக ஜனிவாவில் வரி ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

ஒரு வருக்கொருவர் விட்டுக் கொடுத்து சர்வதேச வர்த்தகத்துக்கு இடைஞ்சலாகவுள்ள தடைகள் நீக்கப்பட்டுவிட்டன அமெரிக்கா தனது சுங்க வரியை பாதிக்குமேல் குறைத்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்க காங்கிரஸ் அனுமதியின்றியே ஜனாதிபதி இந்த ஒப்பந்த விதிகளை நிறைவேற்றிவைக்கலாம்.

(ராய்ட்டர்)

மீரிகம தேர்தல் எதிரொலி

மூன்று ஆள் மாராட்ட வழக்கு

கம்பஹா, அக். 31

மீரிகம தேர்தல் தினத்தன்று ஆள் மாராட்டம் செய்ததாகச் சொல்லப்படும் மூவர் மீது மீரிகம போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், ஏ எஸ் மனநாயகம் கம்பஹா மாஜிஸ்டிரேட் முன்னிலையில் மூன்று வழக்குத் தொடுத்துள்ளார்.

எதிரிகள் மீது கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

லைசென்ஸ் இல்லாத சுழல் துப்பாக்கி

பெண்ணுக்கு ரூ 150 அபராதம்

கொழும்பு, அக். 29

பி. எமலின் பெரேரா என்பவர் மீது கோட்டை மாஜிஸ்ட்ரேட் ஒரு ரிவால்வரை லைசென்ஸ் இல்லாது வைத்திருந்த காரணத்திற்காக ரூ 150 அபராதம் விதிக்கப்பட்டார்.

ரயில் பாதையில் புஸ்தகங்கள்

அனுராதபுரம், அக் 29

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட 1000 ரூபாய் பெறுமதியான புஸ்தகங்கள் அந்த போய்ச் சேரவில்லை அவை தலவாஸலை டேஷனுக்கருகில் ரயில் பாதையில் ஒரு ரயிலவே உத்தியோகஸ்தரால கண்டு பிடிக்கப்பட்டன.

சில டிஸ்தகங்கள் டேவிட் என்பவர் வீட்டில் காணப்பட்டனவால் அவர் மீது களவுக் குற்றம் சாட்டப்பட்டது. இப்போது அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கழகத் தலைவர் இலங்கை விஜயம்

டி. பி. மீனாட்சிசுந்தரம் சனிக்கிழமை வருவார்

கொழும்பு, அக் 31

கொழும்புத் தமிழ்க் கழகத்தினர், கம்பன் விழாவை சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளனர். இது சம்பந்தமாக பிரசித்திபெற்ற தமிழறிஞர் டி பி மீனாட்சிசுந்தரம் எம் ஏ, பி எல், எம் ஓ எல், நாளை சனிக்கிழமை இலங்கை வந்து சேர்வார் என்று தெரிகிறது அண்ணாமலைத் தமிழ்ப் பேராசிரியரான இவ் அறிஞர், தமிழரசுக் கழகத்தின் தலைவரும் பல பாடசாலைகளை நடத்தி வருகிறார். தொடர்ந்து கண்டரிப் பாடசாலைச் சங்கக் காரியதரிசியும் ஆவார்.

கம்பன் விழா

குறித்தகம்பன் விழா வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நவம்பர் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 45 மணி தொடக்கமாக நண்பகல் வரையிலும், பிற்பகல் 4 மணி தொடக்கம் இரவு 8 அல்லது 9 மணி வரைக்கும் நடைபெறும். திரு மீனாட்சி சுந்தரம்பிள்ளை காலையில் "கம்பன் கண்ட பெண்கள்' என்ற விஷயமாகவும், மாலையில் "கம்பன் கண்ட கொடுமை" என்பது பற்றியும் பேசுவார் எனத் தெரிகிறது.

இந்திய உத்தியோகஸ்தர் இலங்கை விஜயம்

கூட்டுறவியக்கத்தை ஆராய்கிறார் அவர்

குருணாகல், அக் 30

சில நாட்களுக்கு முன் இலங்கை வந்து சேர்ந்த இந்திய சர்வ் பாங்கின் விவசாயக் கடன் இலாகா பிரதம உதவி யோகஸ்தர் கே. சுப்பாராவ் குருணாகலுக்குச் சமூகம் அளித்திருந்தார்.

திரு சுப்பாராவ் இங்குள்ள கூட்டுறவியக்க சம்பந்தமான விஷயங்களை ஆராய்வதற்காகப் பல கூட்டுறவுச் சங்கங்களுக்கும், சங்கக் கடைகளுக்கும் விஜயம் செய்தார் இந்தியாவைவிட இலங்கைக் கூட்டுறவியக்கம் சிறந்து விளங்குவதாக அவரால கூறப்பட்டது.

திரு ராவ் இப்போ அநுராதபுரத்துக்குப் போயுள்ளார்.

வழக்கின் நடுவே ஜூரர் மயக்கம்

புதிய ஜூரி நிறுவ ஏற்பாடு

கொழும்பு, அக் 30

நேற்று கொழும்பு அசைஸ் கோர்ட்டில் பிச்சாஸ லேன் கொலை வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது ஜூரர்களில் ஒருவரான எல். எல பெரேரா மயக்கமடைந்து வீழ்ந்து விட்டார் கோர்ட்டில் இருந்த டாக்டர் குணவர்த்தனா திரு. பெரேராவுக்கு மாரடைப்பு நோய் ஏற்பட்டிருப்பதாகவும் சுகமடைய சில நாள் செல்லும் என்றும் தெரிவித்தார். இதன் பேரில் நீதியரசர் புதிய ஜூரர் ஒருவரை நியமிக்கும்படி உத்தரவிட்டார்.

இவ்வழக்கு ரயிலவேத் தலைமைக்காரர் திரு. ராஜலிங்கத்தின் கொலை சம்பந்தமானதாகும்

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோடு மருதானை

புத்தம் புதிய படம்!!

இன்று காண்பிக்கப்படுவது!

மகத்தான 2-வது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சுவர்ணலதா-நஸீர் திரைபட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்

பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்

முன் இடம் தேடுங்கள்!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 31-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org